# அண்ணாவின் அறிவுரைகள்

தொகுப்பு :

கலைச்செல்வன்

60.135
1-61

K.R. நாராயணன்
12. மாடல் ஹட்மண்ட் ரோடு, சி. ஐ. டி. நகர்
சென்னை - 15

முதற் பதிப்பு
1960, செப்டம்பர்

தயாரிப்பு
K. R. நாராயணன்

Acc. No. 816
Dt 26.11.7?
922 ...
816

தொகுப்பு
கலைச்செல்வன்

ஓவியர்
ஆனந்தன்

விலை ரூ. 1-50

அச்சிட்டோர்
பாரி அச்சகம்
சென்னை-1

## மனித சக்தி.

சலக சக்தியும் கிளம்பும் ஊற்று, ஜனசக்தி! அவர்கள் குடும்ப பாரத்தால் வளைந்து போகக்கூடும்; ஆனால் அவர்களுக்கு முக்கியமான பிரச்னைகளைப் பற்றிச் சிந்தித்து முடிவுகட்ட நேரமில்லை. அதனாலேயே அவர்கள் ஏது மறியாதவர்கள்-எதையும் சிந்தித்து முடிவு செய்யும் ஆற்றல் அற்றவர்கள் என்று கூறுவது தவறு. ஜனநாயகக் கோட்பாட்டிற்கே விரோதம் மனித சக்தி மகத்தானது. மக்களின் தீர்ப்பே முடிவானது.

## வடநாட்டு தொடர்பு ஏன்?

நமக்கு வடநாட்டின் தொடர்போ அகில இந்தியக்கட்சியின் தொடர்போ ஏன்? என்ன பயன்? வளமற்ற—வகையற்ற—சிந்திக்கும் திறனற்றக் காரிய மாற்றும் ஆற்றலற்ற— பழைய வரலாறற்ற நாடாக இருப்பின் துணை தேடவும், தொடர்பு தேடவும் வேண்டுவது முறைதான். நமக்கு இல்லையே அந்தத் தாழ்நிலை. எல்லாம் இருக்கிறது இங்கே! எதையும் செய்யும் ஆற்றல் உள்ளவர்கள் உள்ளனர் இங்கே! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எந்த இனமும் கண்டறியாத இழக்கியங்களைக்கண்ட நாடு இது யவனத்தோடு வாணிபமும், சீனத்தோடு தொடர்பும் பண்டைநாட்களிலேயே ஏற்படுத்திக் கொண்டநாடு. நமக்கு என்ன இல்லையென்று இன்று வடநாட்டுத் தொடர்பு வேண்டும் என்று கூற முடியும்!

## கங்கை கரையின் தொடர்பு ஏன்?

கங்கையின் தண்ணீரைக் கொண்டா நமது நாட்டை வளப்படுத்தப்போகிறோம்? காவிரி, வைகை

தென்பெண்ணை இங்குண்டே! அதன் இருகரைகளி லும் எழில் மிகுந்த வயல்கள் உள்ளனவே! காடும் அதிலே பயன் தரும் பொருள்களும் உள்ளனவே! என்ன இல்லை என்று—எந்தப்போருக்கு ஏங்கி வட நாட்டை நாம் எதிர்பார்க்கப் போகிறோம்? காவிரிக் கரையிலே செய்ய வேண்டிய காரியங்களுக்கு கங்கைக் கரையின் தொடர்பு இருப்பானேன்.

## அடக்குமுறை

அடக்கு முறை நியாயமான போராட்டத்தை நடத்துவதற்கு இடையூறாகச் சலிப்பையோ, சஞ்ச லத்தையோ, சோர்வையோ தந்துவிடாது. சோர்ந்து கிடக்கும் சிலரையும் எழுப்பிவிடும்.

## முடியும்

சாதாரண மக்களின் துணைகொண்டே நாம்வளர முடியும்; அன்னக்காவடிகள் தரும் ஆதரவு பணக் காரர்கள் தரும் செக்கைவிட ஜமீன்தாரர்கள் தரும் பணமுடிப்பை விட விலையுயர்ந்தவை—வலிவுடை யவை.

## தமிழனே நீ

ஒரு காலத்தில் நீ உன்னத நிலையில் இருந்தாய். இந்நாட்டு ஆட்சி உன்னுடையதாய் இருந்தது. ஆனால் இன்று நீ ஆண்டியாய்க்கிடக்கிறாய். வீரனால்—விறல்வேந்தனாய் இருந்த நீ இன்று கோழையாய்—பூனையைக் கண்டஞ்சும் பேதையாய் கிடக்கிறாய் இன்று செங்கை யேந்தி சேவடி காத்து நிற்கிறாயே இப்படி நீ ஆனதன் அடிப்படையே உணரவில்லையே.

## வெற்றிபெற

காலப்போக்கை அனுசரித்து காரியங்களை நடத் திச் சென்று வெற்றி காண வேண்டும். தடைகளைக் கண்டு தயங்கினால் எடுத்துக் கொண்ட காரியத்தை எந்தக் காலத்திலுமே நிறைவேற்ற முடியாது.

## கூடாது

கடமை, தவம், தொழில், வாழ்க்கைச் சிக்கல் முதலிய பல கொள்ள வேண்டிய போது இரக்கம் காட்ட முடிவதில்லை. முடியாது, கூடாது.

## பாழ்பட்டமனம்

பாழ்பட்டமனம் பாலைவனத்துக்குச் சமமாகும். பாலைவனத்திலே, பயிரேது, மலர் ஏது? பாழ்பட்ட மனதிலே சிந்தனைக்கு இடமேது? உரிமை உணர்ச்சி ஏது? சுவை எழவே முடியாது.

## வெற்றி கிடைத்தே தீரும்

எவ்வளவு அலட்சியப் படுத்தப்பட்டாலும், ஏளனத்துக்கு ஆளானாலும் எடுத்தக்காரியத்தை முடித்தே தீருவது என்ற திடச்சித்தமும், விடாமுயற் சியும் இருந்தால் வெற்றி கிடைத்தே தீரும். தூற்றி னோரே துதிபாடி நிற்பர்! ஏளனம் பேசினோர் ஏத்தி ஏத்தித் தொழுவர்.

## காட்டுமலர்

ஒருவன் திறமைசாலியாக இருக்கலாம்! ஆராய்ச் சியாளனாக இருக்கலாம் ஆனால் அவன் வெற்றிபெற —அந்த வெற்றியினால் பலரும் நன்மைபெற யாரே னும் கருணையுள்ளம் படைத்த ஒருவர் அவருக்குத்

தக்க சமயத்தில் கை கொடுத்து உதவ முன்வரவேண்டும். இல்லையேல் அவனுடைய திறமை காட்டுமலரா கும்—மீட்டுவாரற்ற வீணையாகும்.

## குணம் மாறாது

மல்லிகை தோட்டத்திலே மணம் வீசினாலும் புதரில் மறைந்திருக்கும் பாம்பின் குணம் மாறாதே!

## விரோதித்துக் கொள்ள

வெற்றி பெற்ற தொன்றே போதும் சிலரை விரோதிகளாக்க. கீர்த்திக்கணவாயில் நுழையும்போது காதகர்கள் காரணமின்றிப் பாறைகளை உருட்டி விடுவர் மேலிருந்து. கடலிலே கலை இருப்பது போல் சமூகத்திலே நயவஞ்சகமுண்டு.

## எப்படி கிடைத்தது.

ஏழையின் வியர்வை சிந்தாமலே, பூமிக்கு அடியில் தூங்கிக் கொண்டிருக்கும் வைரமும், தங்கமும், கடலுக்கு அடியிலே படுத்துறங்கும் முத்தும் உனக்கு எப்படி கிடைத்தது?

ஏழையின் கைத்திறன் இல்லாத 'பண்டம்' உண்டா காட்டு?

## ஏழை

ஏழையின் வாழ்விலே நிம்மதியை ஏற்படுத்தா விட்டால் உன்னையும், உன் உலகத்தையும் அழித்து விடுவான்; அம்பாரி மீது ஏறிக்கொண்டால் யானையைக் கொடுமைப் படுத்தலாம் என்று எண்ணாதே; யானைக்குக் கோபம் பிறந்தால் அதன் காலின் கீழ் நீ கூழாகிவிடுவாய்.



## தொழிலாளியின் முழக்கம்

எத்தனையோ ஏழைகளை அழித்தாய். "நாங்கள் பாடுபடுகிறோம், பலன் காணவில்லை" என்று கூறினது குற்றமென்று கொக்கரித்தாய். ஏழைகளை "ஈ எறும்புக்குச் சமம்" என்று இறுமாப்புடன் பேசினாய். "உலகம் முன்னேறிக்கொண்டு வருகிறது. இனி முதலாளிகளின் கொட்டம் அடக்கப்பட்டே தீரும்" என்று நாங்கள் கூறினபோது, "கத்துகிறார்கள் குலைக்கிறார்கள்" என்று திமிராகப் பேசினாய்—நாங்கள் மறக்கவில்லை.

## முதலாளி வர்க்கமே

குண்டடிப்பட்ட புலி, உறுமும், சீறும் ஆனால் கடைசியில் சாகும். தெரிந்து கொள்.

'கூலிக்காரப் பயல்கள்' என்று கேவலமாக எங்களைக் கூறினாய், கொடியவனே! ஆளப் பிறந்தவர்கள்—ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல் பெற்றவர்கள்—உழைப்பு என்ற ஒப்புவமை இல்லாத செல்வத்தைப் பெற்றவர்கள் நாங்கள்.

எங்களைக் கசக்கிப் பிழிந்து பணக்காரன் குவிக்கும் பவுன்கள் மூட்டை மூட்டையாக மாளிகைகளில் உள்ளன. ஆனால் அவை எல்லாம் ஒரு காலத்தில் வெடி குண்டுகளாகி, மாளிகைகளை மண்மேடுகளாக்கும்.

## விபச்சாரம்

விபச்சாரம் ஏன் ஏற்பட்டது என்பதைப்பற்றி யோசித்து ஆராய்ந்தாலன்றி அதனை ஒழிக்க முடியாது. விபச்சாரம் நடக்கும் இடத்தை மட்டுந்தான் மாற்ற முடியும். விபச்சாரம் உண்டாவதற்குக் கார

ணம் முதலாவது ஏழ்மை. அதனால் மட்டுமல்ல பணஆசைகூட விபச்சாரம் செய்யும்படித் தூண்டும். அதோடு ஆடவரின் ஆணவச் சேட்டைகள்தான் விபச்சார உற்பத்திக்கே காரணம்.

காதல் மணங்கள் நிகழ்ந்து, ஜோடிகள் சரியாக அமைந்து, காதலுக்கு ஜாதியோ, பீதியோ மற்ற ஏதோ தடையாக இல்லாதிருப்பின் உள்ளபடி நாட்டில் விபச்சாரம் வளராது.

மணம் செய்வது மாடு பிடிப்பதுபோல இருக்கும்வரை வாழ்க்கையின் முழு இன்பத்தையும் நுகர முடியாது. அதனால் காதல் இன்பம் சுவைத்தறியாத ஆடவரும், பெண்டிரும் காமச்சேற்றில் புரள்கிறார்கள். அதில் விளையும் புட்புதரே விபச்சாரம்.

## எதிர்கட்சிகளின் கடமை

ஜனநாயக அமைப்பில் அடக்கி ஒடுக்கப்படுகிறவர்களுடைய — அவதிப்படுகிறவர்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராட வேண்டியது எதிர்க்கட்சிகளுடைய கடமையாகும்.

## திட்டங்கள்

திட்டங்கள் நிறைவேறுவதற்கு அரசியல் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்றால், திட்டங்களைத் தீட்டுகின்றபோதும் அந்த எண்ணம் இருந்தால்தான் திட்டம் வெற்றி பெற முடியும்.

## தமிழன்

'தமிழன் சென்றான்—வென்றான்' என்றுதானிருக்குமே தவிர 'தமிழ் நாட்டிற்கு அன்னிய நாட்டான் வந்தான் — தமிழன் தோற்றான்! என்ற வரலாறு கிடையாது. ஆனால் வடநாடு அப்படியல்ல;



வடநாட்டில் அலெக்சாண்டர் முதல் ஆங்கிலேயன் வரை அத்தனை பேரும் வந்தான்—வென்றான் என்றுதானிருக்குமே தவிர 'வந்தவனை வடநாட்டார் தோற்கடித்தனர்' என்று இருக்காது.

## நடிப்பு

பொதுவாழ்வில் ஈடுபட்டவர்கள் நடிக்கவும், நடிகர்கள் பொதுவாழ்வில் ஈடுபடவுமான சூழ்நிலை உண்டாகிவிட்டது. இதற்குக் காரணம் நான்தான். நாடகத்தின் மூலமாகத்தான் நல்லவிதத்தில் முன்னேற்றத்தைக் காண முடியும் நாட்டில் என்பதால் தான் இதைச் செய்ய வெண்டியதாயிற்று.

## எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்

வேகமாக ஓடித் தேவைப்படும் இடத்தில் கொண்டுபோய்விடும் குதிரைக்குக் கொடுக்கப்படும் கூலியை இதுவரை வண்டிக்காரனே வாங்கி அனுபவித்தான். தனக்குத் தேவையானதை தேடிக்கொண்டான் என்பது மட்டுமல்ல; குதிரைக்காக வாங்கப்படும் கொள்ளையும் அவனே சன்மத்துச் சாப்பிட்டுவிட்டான் பரிதாபத்திற்குறிய குதிரைகள் பகுத்தறிவற்ற ஜந்துக்களாய் இருப்பதால் அவை நோஞ்சான்களானபோதும் எதிர்த்துக் கேட்க முடியவில்லை. ஆனால் இந்த நிகழ்ச்சி ஒரு அரசியல் கட்சியிலும் நிகழ்ந்தால்...? மிருகங்களால் பொறுத்துக்கொள்ள முடியும். ஆனால் மனிதர்களால் அதுவும் மானமுள்ளவர்களால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்?

## விசித்திரம்

விழியிலே பழுதிருப்பது வேறு; விழிகளே இல்லாதிருப்பது வேறு. ஆனால் விழிகளில் பழுதிருப்பவர்

களுக்கு விழிகளே இல்லாத கூட்டம் பாதைக் காட்டப் பாடுபடுவது இந்த நாட்டு விசித்திரங்களில் ஒன்று.

## என்ன அர்த்தம்

வெற்றிலை பாக்கு கொடு என்றால், சுண்ணாம்பையும் அதனுடன் சேர்த்துத்தான் கேட்பார்களே தவிர, சுண்ணாம்பு கேட்கவில்லையே என்றால் என்ன அர்த்தம்?

வந்த விருந்தாளிக்கு சாதம் போடு என்று மனைவியைப் பார்த்து கணவன் சொன்னால் அந்த மனைவி இலையில் வெறும் சாதத்தைமட்டும் வைத்து விட்டு நின்றால் என்ன பொருள்?

அதுபோல, ஆட்சியிலிருப்போர் 'திட்டம் சொல்லு' என்று பன்னிப்பன்னி எங்களைக் கேட்டால், அதற்கு என்ன பொருள்?

நாங்கள் தான் சொல்லிவிட்டோமே — "திராவிட நாடு விடுதலைபெறச் செய்வதுதான் எங்கள் திட்டம்" என்று திராவிட நாடு பிரிவினைத் திட்டத்தில் எல்லாத் திட்டங்களும் அடங்கி யிருக்கின்றன.

## நடுத்தர மக்கள்

நடுத்தர மக்கள் ஊஞ்சலைப் போன்றவர்கள்; அவர்கள் பயங்கரக் கிளர்ச்சிகளிலும் ஈடுபட முடியாது; பணக்காரர்களைப் போல் ஆசைக்காட்டியோ, மிரட்டியோ காரியத்தைச் சாதித்துக் கொள்ளவும் முடியாது.

வண்டிக்குக் கடையாணி எவ்வளவு முக்கியமோ அதுபோல் இவர்கள் அரசாங்கத்துக்கு முக்கியமானவர்கள். கடையாணி வளைந்திருக்கிறது என்றால்



அதைச் சீர்படுத்தாமல் மாட்டுக்குக் கொம்பு சீவி வண்ணம் பூசிக் காட்டுகிறார்கள்.

## சுயாட்சி

சுயாட்சி எங்கள் பிறப்புரிமை; இதனைத் தடுக்கத் தகர்க்க எவர்க்கும் இல்லை உரிமை. இது எங்கள் போர் முழக்கம் விடுதலைப் பெறும் வரையில். இப்பா சறைப்பாட்டு ஒலித்துக் கொண்டுதான் இருக்கும்.

## முறைதவறிய செயல்

மக்களின் உரிமைகளைப் பறித்த ஏகாதிபத்திய சர்க்காரை விரட்டிய ஜனநாயக சர்க்காரே இன்று மக்களின் உரிமைகளைப் பறிக்கும் பணியைத் தங்களுடைய முதல் வேலையாகக் கொண்டுள்ளது. இது உண்மையிலே வருந்தக் கூடியதும் வெட்கப்படக்கூடியதுமான ஒரு முறை தவறிய செயலாகும்,

## போகட்டும் உயிர்

உள்ள உயிர் ஒன்றுதான்-அதுபிரிவதும் ஒருமுறை தான்-பிரியப்போவதும் உறுதிதான். வறுமைத்தேள் கொட்டியோ-வர்ணாஸ்ரமப் பாம்பு தீண்டியோ, பிளேக் கிருமிகளாலோ காலரா பூச்சியாலோ காலத்தின் தாக்குதலாலோ, நேரவோ போகப் போகும் இந்த உயிர் எங்கள் நாட்டை மீட்க போர் தொடுத்து உரிமைப் போரில் போகட்டும்.

## நோக்கம்

முடியுடை வேந்தர்கள் காலத்தில் ஜடையுடை வேற்றோரிடம் இழந்துவிட்ட சுதந்திரத்தை மீட்டுத் தரும் மகத்தான நோக்கம் கொண்டிருக்கிறோம் நாம்.

## கண்டிக்கிறோம்

'காங்கிரஸ் சர்க்கார் செய்வதையெல்லாம் கண்டிப்பதும்! கண்டிக்கச் செய்வதும் தான் உன் வேலையா?' என்றால் நிச்சயம் அதுவல்ல! காங்கிரஸ் சர்க்கார் நல்லது செய்தால் ஆதரிக்கிறோம் கெட்டது செய்தால் கண்டிக்கிறோம்.

## எதிர்கட்சிகளும் வேண்டும்.

மோட்டார் நன்றாக ஓட, அதை ஓட்ட விசையிருந்தால் மட்டும் போதாது. தவறான வழியில் சென்றால் தடுக்க பிரேக்கும் இருக்க வேண்டும். நாடு செழிக்க நல்ல ஆறு இருந்தால் மட்டும் போதாது இதிலிருந்து வெள்ளம் புரண்டு ஊரை அழித்து விடாமல் இருக்க கரை வேண்டும்! நல்ல காளையை ஓட்ட இது சவுக்கு இருந்தால் மட்டும் போதாது. அதைக் கிழக்கேயும் மேற்கேயும் திருப்ப மூக்கணாங் கயிறும் வேண்டும்! வீட்டிற்கு வாயிற்படி இருந்தால் மட்டும் போதாது கதவும் வேண்டும். கதவுக்குத் தாழ்பாளும் வேண்டும். அது போலவே ஜனநாயக காலத்தில் குடியாக வந்த பிறகு-நல்லாட்சி நடக்க வேண்டுமானால் ஆளும்கட்சி ஒன்று இருந்தால் மட்டும் போதாது. மாற்றுக்கட்சிகளும் இருக்க வேண்டும்.

## அதிகாரம்

அதிகாரம் ஒரு போதை! பருகப்பருக இனிக்கும் பழகப்பழக அதிலே சொக்கி விழாதவர்கள் வெகு சிலரே. அதிகம் அரசியல் அதிகாரம் அதிகமான போதைதரும். அதைப் பருகுவோர் பரமானந்தமடைந்து, பாதம் பூமியில் சரியாகவும் படியாதபடி தாண்டவமாடுவர்! அந்தப் போதையின் பயனாக



ஏதேச்சாதிகாரமும், சர்வாதிகாரமும் ஏற்படும். தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டனாக மாட்டானா?

## நாங்கள் யார்

மக்கள் மந்திரிகளுக்குப் பயப்படவேண்டியதில்லை. ஆட்சியால் மாசு ஏற்பட்டால் மந்திரிகளை மாற்றும் பொறுப்பு மக்களுடையது. மந்திரிகளை மாற்றும் போது மக்கள் மக்கள் திறமையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தவே நாம் பாடுபடுகிறோம்! விளக்கு பிரகாசமாக எரிய தூண்டுகோல் பயன் படுவது போல!

## உரிமைகிடைத்ததா ?

'கடமையைச் செய்து வந்தால் உரிமை தானாகவே வந்தடையும்' என்ற விரும்பத்தகாத உபதேசத்தை எத்துக்காரர்கள் சிலர் ஏமாளிகளுக்கு உருக்கமாகச் செய்து வருகிறார்களே அதன்படி அந்த உபதேசத்தை என்றும் கேட்டறியாமலே, தனது கடமையை நிறைவேற்றிவந்தான். உரிமை அவனுக்குக் கிடைத்ததா இல்லை?

## நாம்

பழங்குடி மக்களான திராவிடர்கள், நாகரிகத்தில்-மொழியில்-அரசியலில்-சமுதாயத் துறையில்-கலையில் வடநாட்டுக்கு முற்றிலும் புறம்பான தனிச்சிறப்போடு கூடிய உச்ச நிலையில் இருந்தனர். இவ்வளவு உச்சநிலையில் இருந்து வந்த நாம் ஆரியன் சேர்க்கைக்குப் பிறகு நடைபிணங்களாக மாறினோம்.

Acc. No. 516
Dt 26.11.77



## ஏன் சொல்கிறோம்

மக்கள் ஜனநாயக காலத்தில் சர்க்காரைக் கவனிக்கவும், கண்டிக்கவும், அவர்களுக்கு உள்ள உரிமையைமறந்து விடக்கூடாது என்று மக்கள்பால் எங்களுக்கு உள்ள அன்பாலும், ஜனநாயகத்தின் மேல் எங்களுக்கு உள்ள ஆர்வத்தாலும் சொல்லுகிறோமே தவிர மந்திரி பதவியைக் காப்பாற்ற வேண்டும் என்ற நச்சுவிளப்பாலல்ல.

## எங்கள் நாடு

'இது எங்கள் நாடு! நாங்கள் பிறந்த பொன்னாடு நாட்டாட்சியை நாங்கள் மீண்டும் பெற, நல்லாட்சியை அமைக்க, நலம் பல கொண்டு சேர்க்க! நாங்கள் நினைப்பது நடவாதா? கூடாதா?

## நயவஞ்சகர்கள்

மக்களாட்சி எனும் மாண்புள்ள கொள்கையை நடைமுறைத்திட்டமாக்கும் போது, நயவஞ்சகம் கொண்டவர்கள், பொதுமக்களை எளிதில் தந்திரமக ஏமாற்றி விட முடிகிறது ஏமாற்றுவதுடன், பொது மக்களை தலையாட்டிகளாக்கி விடமுடிகிறது.

## தமிழும் திராவிடமும்

மாம்பழச் சாருக்கும், கரும்புச்சாருக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் தான் தமிழுக்கும் திராவிடத்திற்கும் உள்ளது. மாம்பழத்தின் சாருக்கும் கரும்பின் சாருக்கும் நாங்கள் வித்தியாசம் காண்பதில்லை. திராவிடம் என்ற சொல்லும் தமிழ் என்ற சொல்லும் இரண்டறக் கலந்திருக்கிறது.



## தமிழும் ஆரியமும்

தமிழ்வேறு-ஆரியம்வேறு, தமிழ்க்கலைவேறு-ஆரியக்கலைவேறு. இது வரலாறு கற்பிக்கும் பாடம். ஆரியக்கலையில் அளவுக்கு மீறி பற்றுக் கொண்டவர்கள் கூட தமிழ்க்கலை, ஆரியக்கலைக்கு முற்றிலும் புறம்பானதனிச் சிறப்புடையது என்பதை மறக்க முடியாது.

## வாலிபம்

சந்தனக்காட்டைக்கடந்து மணமும் குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்க வருகிறதே தென்றல் அது போன்றது வாலிபம்.

## புதுக்கோலம்

சுதந்திரம்-விடுதலை என்றால் சட்டசம்பந்தமான சொற்களின் மாற்றம் என்றல்ல வாலிபன் எண்ணுவது. புதியநிலை- புதுஅழகு- புதுஉருவம்- புதிய மகிழ்ச்சி-நாடுபுதுக்கோலம் கொள்வது என்றே கருதுகிறான் உண்மையும் அதுதான்.

## வௌவால்கள்

பழமையை விரும்புபவர்களைக் கொண்டு புதுமைச் சித்திரத்தைத் தீட்டமுடியாது அவர்கள் தீட்டியான பிறகு கோபிப்பது வீண்வேலை. அந்தப்பணியினை வாலிபர்கள் புரியும்போது பழமை பயங்காட்டும் வைதீகம் மிரட்டும்; ஜாதி எதிர்க்கும்; சம்பிரதாயம் சீறும், குருட்டு கோட்பாடுகள்- முரட்டு பிடிவாதங்கள், அர்த்தமற்ற பற்று பாசங்கள் இவைகளெல்லாம் இருண்ட மண்டபத்திலே வட்டமிடும் வௌவால்கள் போலக்கிளம்பும்.

## தேவையான அறிவு

விறகு வெட்டி வேதனைப்பட்ட சத்தியவான், ராஜ்யமிழந்து சுடலைகாத்த அரிச்சந்திரன், பெற்ற குழந்தைகளைக் கிணற்றில் தள்ளிய நல்லதங்காள் இவர்களைக்காட்டி எத்தகைய அறிவு வளர்க்க முடியும்! விதி-விதி என்று அவனை விம்மவைக்கத்தானே முடியும் இந்த தேள் கடிக்கு பிறகு, ஒருதேன் சொட்டு அவனுக்கு- அதாவது மேல் உலகக்காட்சி—அங்கு கற்பக விருட்சம் காமதேனு! இந்த, அறிவு, அல்ல இன்று தேவைப்படுவது.

## அறிகுறி

சமுதாயத்திலே புதிய துறைகள். அதன் அமைப்பிலே புதியதோர் மாற்றம் தேவை.· அந்தப் புதிய உருவத்தை உருவாக்கும் உயரிய பணிதான் மறுமலர்ச்சி அதன் அவசியத்தை மிகப்பெரும்பாலான மக்களுக்கு உணர்த்துவிக்க நாடகமே நல்லகருவி. எனவே நாடகத்தில் மறுமலர்ச்சி மிகமிக முக்கியமானது. நாட்டின் விழிப்புக்கு அது நல்லதோர் அளவுகோல். நாளைநாம் எப்படி இருப்போம் என்பதற்கு அதுவே அறிகுறியாகும்

## மறுமலர்ச்சி

ஒருசிலர் ஓயாது உழைத்து; சலிப்பு, கோபம், வெறுப்பு, பகை என்னும் உணர்ச்சிகளுக்கு பலியாகிவிடாமல் புன்னகையும் பெருமூச்சும் கலந்த நிலையில் பணிபுரிந்து, பட்டமரம் துளிர்விடும் வரையில் பாடுபட்டு வெற்றிகண்டு மறுமலர்ச்சியை உண்டாக்கிவைக்கிறார்கள்.



## நாடகம்

நாடகம்—இன்று நள்ளிரவுச்சத்தமல்ல—நடையாலும், உடையாலும், விழியாலும், மொழியாலும் அரைத்தூக்கத்திலிருப்பவர்களுக்கு ஆனந்தம் தர முயற்சிக்கும் வெறும் ஆடல், பாடல் அல்ல! நாடகம். இன்று நாட்டுக்கு ஒரு நல்லரசனாக முன்வந்திருக்கிறது. துணிவுடன்-

## நன்னெறி

இயல், இசை, நாடகம் மக்கட்கு அறிவு வளர ஆர்வமூட்ட அகமகிழ்ச்சிபிறக்க, நன்னெறியைக்காட்டப்பட வேண்டும்.

## சமூக அமைப்பு

இருபதாம் நூற்றாண்டு வாழ்க்கை வசதிகள் அவ்வளவையும் ஒன்றுவிடாமல் அனுபவிக்கிறோம். சமுதாய அமைப்பு, விக்கிரமாதித்யன் காலத்ததாக இருப்பது பொருந்துமா!

## ஓட்டர்

காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு மக்களைப்பார்த்தால் 'ஓட்டர்' என்ற நினைவுதான் முதலில் வரும். எங்களுக்கு 'மனிதர்' என்ற நினைப்பு முதலிலும்பிறகு 'ஓட்டர் என்ற நினைவும் வரும்.

## பிரச்சினை

நாம் கொண்டிருக்கிற நோக்கம் சாமான்யமானதல்ல. நாட்டை மீட்கும் ஒரு பெரிய பிரச்சினை.

## சுதந்திரம்

அறிவுச்சுடரைக் கொளுத்தி சுதந்திரம் பெற வேண்டும். ஏழை-எளியவர்கள் குடிசைகளைக் கொளுத்தியல்ல.

## வெற்றி

தமிழர் என்ற உணர்ச்சியையும், திராவிடம் என்னும் இலட்சியத்தையும் மக்களிடம் ஊட்டி விட்டால் பிறகு வெற்றி பெறுவது மிக எளிது!

## நம்மொழி

திரௌபதை துகில் கட்டுவதா இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டியவர் துர்ச்சாதனன் என்றால், திரௌபதைக்கு என்றைய தினம் துணிகிடைக்கும்? அதுபோல, தமிழனுக்கு இந்தி வேண்டுமா? வேண்டாமா? என்பதை வடநாட்டுக்காரன் தீர்மானிப்பதென்றால் நம்முடைய தமிழ்மொழி எப்படித் தப்பும்?

## பட்டினி

சிதையும் வாழ்வை செம்மைப் படுத்துவது முதலாளித்துவ முறையல்ல. ஆகையால் தான் முதலாளித்வ முறையுள்ள இடங்களிலே பண்டங்களின் தேக்க மிருந்தும் பட்டினி ஒரு புற மிருக்கிறது.

## மேதினம்

ஏழை என்றும் பணக்காரன் என்றும் இரு வர்க்கம் இருப்பது பொதுவாகவே சமூகத்துக்குக் கேடு



ஆபத்து என்று எடுத்துக் கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள். சமதர்ம நோக்குடையத் தலைவர்கள் அந்த அரும் பணியின் ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம் அளவு, கட்டுத் திட்டம் இன்றி முதலாளிகளால் சூறையாடப் படுவது தடுக்கப் பட வேண்டும் என்று துவக்கப் பட்ட முதல் முயற்சி மேதினம்.

## முதலாளி

முதலாளித்துவ முறை லாபம் கிடைக்கும் வரையில் வேலை தரும். தொழிலாளர்களுக்கு, லாபம் இல்லையேல் வேலையுமில்லை என்று கூறிவிடும். பால் தரும் வரையில் பசு தொழுவத்திலே இருக்கிறது; பால் தருவது தீர்ந்ததும் கிராமத்துக்கு துரத்தப்படுகிறதே அது போல, நாட்டுவளம், இயற்கை சக்தி, பாட்டாளி உழைப்பு, யாவும் சேர்ந்து இந்த முதாலாளித்வத்துக்கு பெருவாரியான லாபம் தருகிறது. விஞ்ஞானத்தை விலைக்கு வாங்கி தொழிலாளியைக் கொண்டு மட்டுமல்லாமல் விஞ்ஞானத்தையும் துணை கொண்டு லாபந்தேட கிளம்பி விட்டனர் முதலாளிகள்.

## நாகரீகம்

சிலருடைய தயாள குணத்தினால் ஒரு பெரிய கூட்டத்தில் வளர்ந்து வரும் தொல்லைகளை போக்கிவிட முடியாது. இதனால் தொழிலாளர்களின் வாழ்க்கையிலே வறுமை கொட்டலாயிற்று, வாட்டம் அதிகரித்தது, அதே போது தொழில் முறை மாறி பண்ட உற்பத்தி அதிகரித்து செல்வம் கொழித்ததால் வாழ்க்கை வசதிகள் அதிகமாகி நாகரீகம் மேலோங்கி விட்டது.

## ஏழ்மை

ஏழ்மையின் வேதனையை உணர்ந்து; தன்போல கஷ்டப்படுவர்களைக் காண நேரிடும் போது கண்ணீர் வடிக்கும் இளகிய மனது படைத்த ஏழையும் உண்டு, ஏழ்மை கொட்டிக் கொட்டி, மனமே மரத்துப்போய் ஈவு இரக்கங் காட்டாத—காட்டமுடியாத—ஏழைகளும் உண்டு.

## இரத்தக் கண்ணீர்

ஏழ்மையைக் கண்டு உலகம் இகழ்கிறது, வெறுக்கிறது என்பது தெரிந்து, தன் ஏழ்மையைமறைக்கப் பார்க்கும் ஏழ்மையின் நிலமை மிக மிக வேதனை நிரம்பியது. இடிந்த வீட்டுக்கு மண் பூச்சு, கிழிந்த கோட்டுக்கு ஒட்டு வேலை, சரிந்த சுவருக்கு முட்டுக் கொடுத்தல் போன்றவைகளை செய்யும் போது அந்த ஏழையின் நிலைமையைக் காண்போர் இரத்தக் கண்ணீரை விடவேண்டி நேரிடும்.

## ஏழை சமுதாயம்

ஏழை அழுகிறான். ஏழையின் தொகை வளருகிறது. ஏழையின் ரகங்கள் வளருகின்றன. கவனிப்பார் இல்லை சமுதாயத்தில் ஏழைகளின் தொகை பெருகுவது படகுக்கு அடியிலே ஏற்படும் வெடிப்புகள் என்பதை உணருவதில்லை! ஓடத்திற்கு அலங்காரப் பூச்சுத்தேடுகிறார்கள். உல்லாச பயணத்துக்கு, நான் நீ என்று முந்திக் கொள்கிறார்கள். அவர்கள் அறியவில்லை ஓடத்துக்கு அடியிலே ஏற்படும் ஓட்டைகளை!

## சமூகக்காவலர்

ஏழை என்ற ஒரு சொல்லிலே அடங்கி இருக்கும் ஆபத்தை உணராமலேயே, சமூகத்தின் காவலர்கள்



என்ற நிலை பெற்றவர்கள் தத்தம் காரியத்தையே கவனித்துக் கொண்டு போகின்றனர்.

## முதலாளி

முதலாளி எப்படி உற்பத்தியாகிறான்? எதனால் ஒருவன் முதலாளியாகிறான்? இதற்கு சுருக்கமான பதில் தனிப்பட்ட மனிதன் லாபத்தால் முதலாளியாகிறான். இன்னும் கொஞ்சம் விளக்கமாக, மார்க்ஸ் கூறுகிறபடி பார்த்தால் தொழிலாளிகளின் உழைப்பை முதலாளி திருடிக் கொள்கிறான், ஆகவே அவன் முதலாளியாகிறான்.

## சரியாகாது

முதலாளித்துவம் ஒரு மதம் பிடித்த யானை. அந்த யானையைப் பிடித்து வாழை நாரினால் துதிக்கையைக்கட்டி, அந்தக் கயிறை ஒரு வாழை மரத்தில் கட்டிவிட்டு பார், பார் நான் முதலாளித்துவத்தைக் கட்டிப்போட்டு விட்டேன் என்று கூறினால் சரியாகாது!

## இலட்சியம்

நாட்டை பிரித்து விட்டால் வெளிநாட்டு முதலாளிகள் தலைகாட்ட முடியாது திராவிடத்தில்! முதலாளிகளின் ஆதிக்கப் பிடியிலிருந்து விடுதலையடையும் திராவிடம், அந்த திராவிடத்தை அடைவதுதான் நமது இலட்சியம்.

## கூட்டாளி

தொழிலாளி வெறும் உழைப்பாளியாக மட்டுமே இருக்கும் நிலைமாறி அவன் தொழிற்சாலைகளிலே பங்

காளியுமாக்கப்பட்டால் விஞ்ஞானத்தைத் தன் கூட்டாளி என்று உறவு கொண்டாட முடியும்.

## வழிபிறக்கும்

பொதுநலம் பாட்டாளி ஆட்சியிலே தான் மலர முடியும். அந்த ஆட்சியின் வெற்றியினுல் மட்டுமே உழைப்பு ஊரழிக்கும் காரியமாகாது தடுக்கவும் விஞ்ஞானம் விபரீதத்தைப் பொழியாது நன்மைகள் பயக்கக் கூடியதாக அமையவும் வழி பிறக்கும்.

## செலவிடுகிருர்கள்

ஏழையின் வயிற்றிலடித்து திரட்டிய பணத்தை உருட்டி வைத்துக் கொண்டிருக்கும் செல்வந்தர்கள் பணத்தை பகுத்தறிவுக்கோ பயன் தரும் பணிக்கோ செலவிடும் திருந்திய மனம் உடையவர்களல்ல. போக போக்கியத்துக்கும், போகிற கதி நல்லதாக இருக்க வேண்டுமே என்பதற்காக மட்டுமே பணத்தைச் செலவிடுவார்கள்.

## உணர வேண்டும்

பிரபுக்கள் மதவேட மிட்டு புரோகிதர்களுடன் கூடிக்கொண்டு ஏழைகளைச் சுரண்டி கொழுத்தனர். அறிவுக் கதிர் பரவவே மதமுலாம் வெளுத்து விட்டது. அம்முறை பயனற்றது என்று தெரியவே இப்போது பிரபுக்கள் புதிய கோலம் எடுத்துள்ளனர். தேசபக்தர்கள் என்ற உருவிலே உலவுகிருர்கள். உழைப்பாளர் உலகு இதனை உணரவேண்டும்.

## பாசிசம்

சிறைக்குள் தள்ளி கிளர்ச்சியை அடக்கிய எந்த வல்லரசும் வரலாற்றில் இடம் பெற்றதில்லை. பாஸிசத்தின் முதல் அடி பயங்கரமான தாகத்தான் இருக்கும். ஆனுல் அதன் வீழ்ச்சி எதிர்பாராத நேரத்தில் இருக்கும். திடீரென்று சரியும்.



## கம்யூனிஸ்ட்டு கட்சி

திராவிடத்தில் தி. மு. க. தான் சரியான, உண்மையான கம்யூனிஸ்டு கட்சி என்று நான் கூறுகிறேன். வெளிநாட்டிலிருந்து இதற்காக ஒரு குழு வந்து விசாரிக்குமானுல் ஆதாரங்கள் ஆயிரம் ஆயிரம் காட்டி நிரூபிப்பேன். இங்கே வரண்ட தலைகள், ஒட்டிய வயிறு குழி விழுந்த கண்கள் ஏராளம் உழைத்துஉருக்குலைந்த தோழர்கள் பலரே பணியாற்றுகின்றனர். தொழிலாளர் பலர் அங்கம் வகிக்கின்றனர்.

விவசாயிகளின் மத்தியில் அரசியல் வாதிகள் புகுந்து அவர்களின் வேதனையைக் களையச் செய்வது என்பது வெறும் பட்டாசு கொளுத்துவது போன்றதல்ல. தீப்பந்தம் தாங்கி வெடிமருந்துச் சாலைக்குள் நுழைவது போல ஆபத்து நிறைந்தது ஆகவே தான் தீப்பந்தம் அங்கே நெருங்குதல் கூடாது. அரசியல் வாதிகள் போகக்கூடாது என்பதை நான் அவ்வளவு வலியுறுத்துகிறேன்.

## அணிவகுப்பு

எதிர்பாராத அளவுக்கு மலைபோல் வளர்ந்து விட்ட நமது இயக்கம், நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற இலட்சியத்தை அடைவதென்பது அதன் பின்னுல் அணிவகுத்து நிற்கிற ஆயிரக்கணக்கானவர்களின் கையில்தான் இருக்கிறது.

## தொழில் பிரச்சினை

உலக அரங்கில் மிக முக்கியமானதாகவும், பலருடைய மனதை மருட்டக் கூடியதாகவும் தொழி

லாளர் பிரச்சினை வளர்ந்துவிட்டது. நீதியையும் நேர்மையையும் சமுதாயத்தில் அமைதியையும், சுபீட்சத்தையும் விரும்பும் எவரும் தொழிலாளர் பிரச்னையை அலட்சியப்படுத்தியோ அல்லது அடக்குமுறைகளால் அழித்துவிடக் கூடுமென்றோ எண்ண முடியாது.

## முதலாளித்துவம்

ஒருபுறம் வேலையில்லாத் தொழிலாளர்கள் தொகை தொகையாக இருப்பர். மற்றொருபுறம் தேவைக்கேற்ற அளவு சரக்கு கிடைக்காததால் தவிக்கும் மக்கள் இருப்பர், முதலாளியின் லாப நோக்கம் சிலசமயம் சரக்குகளைத் தேக்கி வைக்கும் வேறு சில சமயங்களிலே சரக்குகளை 'மார்க்கெட்'டை விட்டு விரட்டியடிக்கும் அவசியமானது, ஆகவே செய்யப்பட வேண்டியது என்பதல்ல முதலாளித்துவம், லாபகரமானது; ஆகையால் செய்யப்பட வேண்டியது என்பதே தத்துவம்.

## தியாகிகள்

'தமிழன் சென்றான், வென்றான்'—இதுதான் வரலாறு தரும் செய்தி! சேரன் செங்குட்டுவன், பாண்டியன், நெடுஞ்செழியன், கரிகாற்பெருவளத்தான், குலோத்துங்கன், இராசராசன், இராசேந்திரன்—இவர்களெல்லாம் வெளிநாடு சென்றார்கள்—வென்றார்கள்! ஆனால் இன்று தோற்றவர்களிடத்திலே வென்றவர்கள் ஏன் அடிமைப்பட்டிருக்க வேண்டும்? இந்த கேள்விக்கு விடைகண்டு, விடுதலையும் காணத்தான் இன்று எந்த நேரத்திலும் இலட்சியத்திற்காகச் சாக இலட்சக்கணக்கான பேர் தயாராக இருக்கின்றனர்! ஆட்சியாளரின் அடக்கு



முறைக்குப் பலியாகும் தியாக புருடர்கள் பட்டியல் வளர்ந்து வருகிறது!

## இலட்சிய வீரர்கள்

ஆளுவோரிடத்திலே தடியும், துப்பாக்கியும், பட்டாளமும் இருக்கின்றன, எங்களிடத்திலே இலட்சிய வீரர்கள் இருக்கிறார்கள்.

## உண்மை

இலட்சிய வெறிக்கும் ஆதிக்க வெறிக்குமிடையே போராட்டம் நடைபெற்றால்......ஆதிக்கப் பித்து வெற்றி பெற்றது என்பதற்கு உலக சரித்திரத்திலே ஆதாரமே கிடையாது! இலட்சியம் வாகை சூடிற்று என்ற உண்மை ஏராளமாகக் காணக்கிடக்கின்றது.

## வேற்றுமை

பாகிஸ்தானும், ஆப்பிரிக்க நாடுகளும் ஒரே முஸ்லீம் மதத்தைத் தழுவியவைதான். கிரித்துவர்களும், முஸ்லீம்களும் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கேயெல்லாம் ஒரே கடவுளை-ஒரே நேரத்தில்-ஒரு மாதிரியாகத்தான் தொழுகிறார்கள். அவர்களுக்குள்ளே ஏன் நாட்டுக்கு நாடு வேற்றுமை—பகை உணர்ச்சி எல்லாம்!

## தங்கரேகை

கோலார் தங்கச் சுரங்கத்தில் நேரே கீழே இறங்கினால் நாம் தங்கத்தைப் பார்க்க முடியாது. பாறை எந்தப் பகுதியிலிருக்கிறதோ, அந்தப் பகுதியில்-தங்க ரேகை எங்கே ஓடுகிறதோ அங்கு வெட்டிய பிறகுதான் தங்கத்தைக் காணமுடியும். உண்மையும் அப்படித்தான். தங்கரேகை நேராக இல்லாமல் வளைந்து

வளைந்து தான் செல்லும். அது ஓடும் பக்கத்தைக் கண்டு பிடிக்கும் திறனும் மனப்போக்கும் வேண்டும். உண்மை என்னும் அந்தத் தங்கரேகை நோக்கித்தான் தி. மு. கழகம் செல்லுகிறது.

## பாடுபடுகிறது

தி. மு. கழகம் தன் மனதுக்கு சரி என்று படுவதை திட்ட வட்டமாகத் துணிவுடன் அச்சம் தயை தாட்சண்யமின்றி ஆதாரத்தோடு எடுத்துச் சொல்லி அதற்கென பாடுபடுகிறது.

## அன்னியன்

வட நாட்டானை எப்படி அன்னியன் என்று சொல்ல முடியும்? எல்லோரும் இந்தியர்கள் தான்—என்று காங்கிரசுகாரர்கள் சொல்லுகிறார்கள். அன்னியன் என்றால் யார்? என்பதை நாம் பார்க்க வேண்டும். எவருடைய பாஷை நமக்குப் புரியாதோ, அவன் நமக்கு அன்னியன் தான்! ஆங்கில பாஷை நமக்குப்புரியாது—ஆங்கிலேயன் அன்னியன்! அதேபோல, இந்தி நமக்குப்புரியாது-வடநாட்டானும் அன்னியன் தான்! உடையிலும், உணவு முறையிலும் நமக்கு ஆங்கிலேயன் எப்படி அன்னியனோ, அதே போல்தான் வடநாட்டானும் அன்னியன். அன்னியன் என்பதற்கு இலக்கணம் உணவு, உடை, மொழி இவைகளில் வேறுபாடுகள் காணப்படுவது தான்.

## யுத்தம்

மத விஷயத்தில் வடநாட்டினரும் இந்துக்கள்; நாமும் இந்துக்கள் இல்லையா?—என்று கேட்கிறார்கள் அவர்களுக்கு நான் சொல்லுவேன்-ஜெர்மானியரும் கிருத்துவர்கள் தான்; பிரான்சு நாட்டிலிருப்பவர்களும் கிருத்துவர்கள் தான். பின் அவர்களுக்குள்ளே ஏன் யுத்தம்?



## நல்வழி

நாட்டைமீட்கவீரரணைகளச்சூரரையும்,நல்லாட்சி அமைக்க பலகலைவாணரையும் மக்களை நல்வழிப் படுத்த அறநெறி கூறுவோரையும் நாடியாக வேண்டும் எந்த நாட்டுக்கும் அனைவரும் ஏக காலத்தில் கிடைக்க மாட்டார்கள் ஒரு தலைமுறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான். மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி நல்லாட்சி அமைப்பர். பிரிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டுவார்.

## நல்லவர்

மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானால் அவர்கள் மனதிலே உள்ள மாசு, மதவெறி ஜாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் ஒழிந்தாக வேண்டும்.

## இயற்கை

இயற்கை நம்மைத் துரோகம் செய்து விடவில்லை மற்ற நாடுகளிலே உள்ளதைவிட, இயற்கை வளம் இங்கு கண்டவர்கள் பொறாமைப்படும் அளவிற்கு இருக்கத்தான் செய்கிறது. என்றாலும் தொழில்வளம் தொழில் திறம் போதுமான அளவு பெருகாததால் தரித்திரம் தாண்டவமாடக்காண்கிறோம். புதிய முறைகளையும் கருவிகளையும் கொண்டு இயற்கை வளத்தைப் பயன்படுத்துவதிலே மற்ற நாடுகளை விட நாம் மிகப் பின்னணியில் இருக்கிறோம்.

## சமத்துவம்-சமதர்மம்

நன்றாக இருக்க வேண்டும் சுருதியுடன் சேர்ந்து பாட வேண்டும். தாளம் தவறக்கூடாது இவ்வளவு தானே என்று பாட ஆரம்பிக்கும் போதுதானே தெரிகிறது. சாரீரம் வித்வானுடன் ஒத்துழைக்க மறுப்பதும், சுருதியுடன் அவர்மல்லுக்கு நிற்பதும், தாளம் அவருக்கு செய்யும் துரோகமும். அதுபோலத் தான் சமத்துவம்—சமதர்மம் போன்ற இலட்சியங்களைப் பேசுவது சுலபம், சாதிப்பது கடினம்.

## பேதம்

பேதம் வெறும் மன உணர்ச்சியினால் மட்டுமே ஏற்படுவதல்ல—பேதம் இலாபம் தருகிறது. எனவே தான் அதனை விட்டுவிட மனமில்லை, பேதத்தால் பிழைப்பவர்களுக்கு ஓநாய்க்கு இரத்தபானத்தில் சுவையிருக்குமட்டும் ஜீவகாருண்யத்தை அது எப்படி வரவேற்க முடியும். பேதமும் பலகாலமாக இலாபம் தரும் சாதனமாக இருப்பதாலேயே, அதற்கு 'சாகா வரம்' கொடுக்கின்றனர். அதனால் இலாபம் பெருகின்றவர்கள், பேதத்தால் வரும் இலாபம் ஒழிக்கப்பட்டால் தான் தோழமை இருக்க முடிகிறது.

## ஓய்வு

ஓய்வு-உயர்ந்த பண்புள்ள நண்பன் மூலம் நாம் என்ன பெற முடியுமோ அவ்விதமான மனமகிழ்ச்சியைத்தருவதாக அமைத்துக்கொள்ள வேண்டும். அது இன்றுள்ள சமூக, பொருளாதார அமைப்பு வரையில் சாத்தியமாகுமா என்பது மிகமிகச் சந்தேகம்.



## இயற்கை

இயற்கை தன் அழகை வாரி வீசுகிறது—கவனிப்பாரற்றுக் கிடக்கிறது—எழில்மிக்க விதவையைப் போல.

## ஆலைத்தொழிலாளி

அலுத்துத் தூங்கும் ஆலைத்தொழிலாளியிடம் ஓய்வின் உயர்வைப் பற்றி பேசுவது, ஓய்வை எப்படி பயன் படுத்துவது என்று கூறுவது; மாளிகையிலே திமிர்பிடித்து உலவும் நாய் பணியாளைக் கடித்தது கண்டு சீமான் இன்ன மருந்து சாப்பிட்டால், நல்லது; ஆபத்து இராது என்று பணியாளுக்கு யோசனை கூறுவது போலாகும்.

## வேலை

வேலை மனிதத்தன்மையை மாய்க்காத அளவு இருக்க வேண்டும்—வேலை நேரத்தை மட்டு மல்ல நான் குறிப்பிடுவது; வேலை முறை—தன்மை வேலை செய்பவனுக்கு வேலை நேரத்தில் வேலைக்குத் தேவையான வசதிகளைத்தருவது எல்லாவற்றையும் சேர்த்துத்தான் கூறுவது.

## ஓய்வு

ஓய்வு சிலருக்கு—வேலை பலருக்கு என்ற—முறை மாறினாலொழிய ஓய்வு சமூக உயர்வுக்குப் பயன்படும் பண்பு ஆக முடியாது. வாழ்க்கைத் தரம் மட்டமாக இருக்கும் சமூகத்திலே ஓய்வு கிடைத்துப் பயனில்லை. பொருளும் இல்லை, வேகாத பண்டத்தை வெள்ளித் தட்டிலே வைத்துத் தரும் வீண் வேலையாகும்.

ஒய்வு என்ற பெயரால் புதிய உழைப்பு—அந்த உழைப்பின் மூலம் கிடைக்கும் வருவாய் வாழ்க்கைச் செலவிற்கு பயன்படவேண்டும்; என்ற நிர்ப்பந்தம் இருந்து விட்டால் அது ஓய்வுமில்லை, பொழுது மாகாது. எனவே கிராமமக்களுக்காகக் கூறப்படும் யோசனைகள், ஓய்வையும் உழவனுக்குப் புதிய எச மானுக்கி விடுகிறது. நண்பனுக்கவில்லை.

•

## கலம்

மனிதன் கஷ்டம் அனுபவித்தபோது மதவாதிகள் அவனுடைய கண்ணையும் கருத்தையும், எந்த உண்மைக்காரணத்தால் மனிதன் கஷ்டப்படுகிருனே அந்தக் காரணங்களைக் காண ஒட்டாமல் தடுத்து, கைலாயம், வைகுந்தம், காகுத்தன், காளியாயி, ஜெப மாலை, உடுக்கை, இப்படி வேறுபல பொருள்கள், முறைகள் மீது திருப்பி விட்டனர். மனிதன், திக்குத் தெரியாத கலத்தைப் போலானுன் .

## நறுமலர்

நறுமலர்க் கூடையிலே நச்சரவு இருந்திடின், மலர் தேடும் கையிலே விஷப்பல்லன்ருே தீண்டும்!

## கருவி

உருட்டும் கண்! மிரட்டும் சொல் ஒரு காலத்திலே ஆதிக்கக் கருவிகள்.

•

## வாழ்வு

புழுத்துப் போன பழைய சம்பிரதாயங்களைப் பேசி தாலிகட்டி விடுவதாலேயே வாழ்க்கை மலர்ந்து விடாது.



## நீதிக்கட்சி

பார்ப்பனரல்லாதர் இயக்கம் சமநீதி காணும் நோக்குடன் என்று துவக்கப்பட்டதே தவிர அது பார்ப்பனர்களை தனிப்பட்ட முறையில் வெறுத்த தில்லை. என் பேரிலும் இப்போது பழிசொல்லுகிருர்க ளல்லவா அண்ணுதுரை இப்போது திடீரென்று பார்ப்பனர்களுக்கு வேண்டியவனுகி விட்டான் என்று நான் வேண்டியவனுக இருக்கிறேனே இல் லேயோ அது வேறு விவகாரம். ஆனல் உண்மையி லேயே பார்ப்பனர்களைத் தனிப்பட்ட முறையிலே வெறுக்க வேண்டிய அவசியமில்லை என்றும் பார்ப்ப னர்களுக்கென்று இருக்கின்ற உரிய பங்கைத் தந்து, பார்ப்பனரல்லாதாருக்கு என்ற நீதியை அடிப்படை யாகக் கொண்டதால்தான் ஜஸ்டிஸ்கட்சிக்கு நீதிக் கட்சி என்றே தமிழிலே பெயரிடப்பட்டது.

## நூல்கள்

நல்ல பக்குவப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் தி.மு. கழகம் பிறர் வசப்படும்படியோ, பிறருக்கு அஞ்சும்படியோ நாங்கள் எந்தக் காலத்திலும் நடந்து கொள்ளமாட்டோம். அதுபோலவே சட்ட சபை யிலும் நாங்கள் சென்றிருப்பது காங்கிரஸ் அமைச் சர்களை ஏசுவதற்கு அல்ல என்பதை நான் சட்டசபை யிலும் சொன்னேன். வெளியிலும் சொல்கிறேன்.

## டெல்லி மதிப்பளித்ததா ?

இரண்டாவது திட்டத்தில் 400 கோடி தேவை என்று நம் காங்கிரஸ்காரர்கள் கேட்டார்கள். என்ன கொடுத்தார்கள்—கிடைத்தது என்ன ? இவர்கள் எங்கே வடநாட்டு ஆதிக்கத்திலே இருந்து விடுபட் டார்களா? கைத்தறிக்கு—கரைபோட்ட வேட்டியும்,

சேலையும் ஒதுக்குங்கள் என்று சாதாரணப் பேச்சல்ல சட்டசபைத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினார்களே, என்ன ஆயிற்று? டெல்லி என்ன மதிப்பளித்தது?

## காங்கிரசு பூசாரிகள்

காளியால் கொடுக்காது என்பது பக்தனைவிட பூசாரிக்குத்தான் நன்றாகத் தெரியும். பூசாரி ஏதே உடுக்கை அடிக்கிறானே என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். அவன் வயிற்றுப் பிழைப்புக் கொடுமையிலே உடுக்கை அடிக்கிறானே தவிர, அவனையே நீங்கள் தனியாகக் கேளுங்கள் "சாமியாரா வரப்பிரசாதமா" என்று உங்களுடைய மடியை தேடியே பார்ப்பான். பார்த்த உடனே நீங்கள் தேங்காய் கற்பூரம் வைத்துக்கொண்டிருந்தால் "ஆகா இதுகண் கண்ட தெய்வமாயிற்றே! கந்தசாமிக்கு காளியா தான் கைகொடுத்தாள் சாமிக்கண்ணுக்கு காளிதான் கண்கொடுத்தாள் என்று சொல்லுவான். மடியிலே ஒன்றுமில்லாமல் விசாரித்தால் உடனே திருப்பி அவனே கேட்பான் "என்னடா பைத்தியக்காரனாயிருக்கிறாய்? காளி சக்தி வாய்ந்தவளானால் என்னை ஏன் இந்த நிலையிலே வைத்திருக்கிறது எங்கள் தகப்பன் பூசாரி! நானும் பூசாரி, என்மகனும்பூசாரி! இதான் இந்தக் காளியாம்பாள் சக்தி! என்னையே கைத்தூக்கி விடாத இந்தக் காளி உன்னை எங்கே கைத்தூக்கி விடப் போகிறது என்று சொல்வான்.

அதைப்போல் டெல்லியிலே இருக்கிறது தேவதை. அதுவா கொடுக்குமா கொடுக்காதா என்பது நம்மைப்போன்றவர்களுக்குக் கூடத் தெரியாது. உடுக்கை அடிக்கிறார்கள் அல்லவா காங்கிரஸ் பூசாரிகள் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.



வடநாடு வளர்ந்திருப்பது—நன்றாகத் தெரிகிறது; தேய்ந்திருக்கிற தென்னாடு மறுபடியும் முன்னேற வேண்டும் என்றால் முன்னாலே வளர்ந்திருக்கிற வடநாடு அதற்கு ஏற்றபடி இடமளிக்காது என்பதும் இப்பொழுது ஓரளவுக்கு நன்றாகத் தெரிந்துகொண்டு வருகின்றது.

## அவர்கள் உள்ளத்திலே

அவர்கள் நம்மைத் தூற்றுகிறார்கள், நாம் உணர்ந்திருக்கிறோம், நாசகாரர்கள் என்றெல்லாம் ஏசுகின்றார்கள்—ஏசி முடிந்த பிறகு அவர்கள் தனியாக இருக்கின்ற நேரத்தில் அவர்களுக்கே மனதில் தோன்றுகின்ற எண்ணம் "உண்மைதானே இவர்கள் சொல்வது — எதற்கெடுத்தாலும் வடநாட்டிற்குத்தானே போக வேண்டியிருக்கிறது. எல்லா அதிகாரமும் அங்கேதானே குறிக்கப்பட்டிருக்கிறது. நம்மிடத்திலே என்ன இருக்கிறது என்ற அந்தக் கழிவிரக்கம் அவர்கள் உள்ளத்திலே இருக்கிறது.

## அவர்களே உணருகிறார்கள்

இன்றைய தினம் காங்கிரசிலே உள்ள பெருந்தலைவர்களேகூட உள்ளூர உணருகின்றார்கள். தென்னாட்டுக்குத் தேவையான அளவுக்கு முன்னேற்றம் இனி கிடைக்க வேண்டுமென்றால் இப்போது இருப்பதைவிட அதிகமான அதிகாரம் கிடைத்தாலொழிய அந்தக் காரியத்திலே வெற்றிபெற முடியாது என்பதைக் காங்கிரசிலே இருக்கிறவர்களே உணருகிறார்கள்.

## மூன்று காரியங்கள்

சட்டசபைக்குப் போகிறவர்கள் யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் மூன்று காரியங்கள் அவர்களுக்கு இருக்கின்றன. தொகுதியுடைய முன்னேற்றத்தைக் கருதிக் கொள்கையையும் விட்டு விடக்கூடாது. கொள்கையைமட்டும் மனதிலே வைத்துக்கொண்டு தொகுதி எக்கேடு கெட்டாலும் எனக்குக் கவலையில்லை என்றும் இருக்கக்கூடாது. தொகுதியையும் பார்த்து சட்டத்தைப்பற்றிய விவாதத்திலேயும் கலந்துகொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அடிப்படைக் கருத்துக்களை இழந்துவிடக் கூடாது. இந்த மூன்றையும் ஒரு சேர நடத்திக் கொண்டு செல்வதுதான் பக்குவமான பாராளுமன்றப்பண்பு. அதைத் திராவிட முன்னேற்றக்கழகம் இதுநாள் வரையில் சரியான முறையில் நடத்திக் கொண்டு வருகிறது என்பதுதான் அரசியல் வட்டாரத்திலே அனுபவப்பட்டவர்கள் எங்களிடம் எடுத்துச்சொல்லி யிருப்பது நாங்களும் மனதார நம்பி இருப்பது.

## அழைக்கிறேன்

ஆர்வமுள்ள திராவிடத் தோழர்களை நான் வேண்டிக்கொள்ளுவேன். இந்த மாமன்றத்திலே இருந்து நான் பல பகவத்சிங்குகளை எதிர்பார்க்கிறேன்—பல திருப்பூர் குமரன்களை அழைக்கிறேன். பல வ. வு. சிக்களை விரும்பி அழைக்கிறேன் அவர்களைப் போன்றவர்கள் நம்முடைய நாட்டிலே நல்ல தியாக எண்ணம் படைத்தவர்கள் திராவிடத்திலே தோன்றினாலொழிய அதுவும் இந்த பத்து ஆண்டுகளிலே கிடைத்தாலொழிய இந்தமா மன்றத்திலே நாம் எடுக்கின்ற முதலின்படி நம்முடைய தாய்த்திருநாட்டை மீட்பதென்பது இயலாத காரியமாகிவிடும்.



## உறுபடையாக அமையும்

நண்பர்களே நீங்கள் தெளிவாக எழுதிவைத்துக் கொள்ளுங்கள். 15 பேராக இருக்கிற நாங்கள் இந்தக் காலத்து வரலாற்றை எழுதவில்லை. எதிர்கால வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கிறோம் — கண்ணீரில் எழுதுகிறோம் — எங்கள் இரத்தத்தில் எழுதுகிறோம்—எங்கள் வியர்வையால் எழுதுகிறோம்—அது உலர்வதற்கு பத்து ஆண்டுகள் பிடிக்கலாம். இருபது ஆண்டுகள் பிடிக்கலாம். ஆனால் அந்த வரலாற்றில் எழுதப்படுகின்ற ஒவ்வொரு வாசகமும் எதிர்காலத்தில் நம் நாட்டினுடைய எதிர்காலத் தலைமுறைக்கு ஏற்படுகின்ற மனவெழுச்சிக்கு, உறுபடையாக அமையும்.

## ஏகாதிபத்தியம்

எந்தச் சமயத்தில், எந்தக் கட்சி, வலையில் வீழ்கிறதோ அதை வைத்துக்கொண்டு, தன் வாழ்வை நடத்த தீர்மானித்திருக்கிறது. ஏகாதிபத்தியம், கோழிச்சண்டை—மாட்டுச்சண்டை—குஸ்தி இவைகளை நடத்திவைக்கும் காசு திரட்டிகள் இருக்கிறார்களல்லவா அதுபோலாகிவிட்டது. ஏகாதிபத்தியம்.

## இன்பம்

இன்பம் இல்லாத இல்லம் ஒரு இருண்ட வீடு அதனால் இடரும் இன்னலும் அதிகரிக்கின்றன. இழிவும் பழியும் மலிந்து கிடக்கின்றன. தந்தி தளர்ந்த வீணையிலிருந்து இனிய நாதம் எங்ஙனம் கிளம்ப முடியும்.

## விழா நாள்.

விழா ஏதோ ஓர்நாள்! விசாரம் மற்ற நாட்களிலே என்ற சிலை ஒழிந்துபட வேண்டுமானால் அன்

புடன் நீவிர் வாங்கிதந்த ஆடை போதாது. அக மகிழ்ந்து பூட்டிய ஆபரணம் போதாது. மனையையும் மாட்டையும் காட்டி மகிழ்வது போதாது. அவரவர்க்கும் தத்தம் வாழக்கையை அமைத்துக் கொள்ளும் உரிமையை விழா பரிசாகத் தாருங்கள். அப்பொழுது தான் வாழ்க்கை ஓர் விழாவாக முடியும்.

## காவி உடை

காவி உடையைக் கண்டு மயங்க மாட்டோம். கள்ளனும் காமுகனும் கூடத்தான் காவி அணிந்து, மக்களின் கண்களையும் மயக்க முடியும். சீலராக இருக்கிறார் என்பதைக் கண்டறிய, உடையை அல்ல, செயலையே கவனிப்போம்.

## காட்டுகிறார்கள்

அமெரிக்கக் கண்டத்தைக் கண்டுபிடித்த கொலம்பஸ், இந்தியாவுக்குக் கடல் மார்க்கம் கண்ட வாஸ்கோடி காமா, ஆப்பிரிக்காவில் மண்டலங்கள் கண்ட லிவிங்ஸ்டன், அடிமை வர்த்தகத்தை ஒழித்த ஆபிரகாம் லிங்கன் போன்ற 'தொண்டர்களின்' பெருமையைப் பேசுவதால் படிப்பதால், மேனாட்டவர், பலன் பெற்று வாழ்கின்றனர். இங்கு நமது புலவர்மணிகள், கோட்புலியையும், கோவணத்தை எடை போட்ட பக்தன் கதையையும் அன்றோ நமக்குப் படித்துக் காட்டுகிறார்கள்.

## நமக்கு ஏற்றது

இரவு மதுரமாயிருந்த பால், காலையிலே திரிந்து விட்டால், சாக்கடையைச் சேர்கிறது. மாலையிலே மாளிகைகளிலே மனோஹரிகளின் கூந்தலுடன் கொஞ்சிய மலர் காலையிலே கசங்கியதும் வீசி எறியப்படு



கிறது குப்பையிலே! பொருள்கள் மட்டுமல்ல, எண்ணங்கள், ஏற்பாடுகள், முறைகள், நீதிகள் எனும் எவையும் அப்படித்தான். காலத்துக்கு ஏற்றதாக, நடைமுறைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

## ஆரிய நாரை

கடிவாளத்திற்கு வாய்திறந்த பிறகு, குதிரையின் கொட்டம் அடக்கப்படுவது ஆச்சரியமாகுமா? மூக்கணாங்கயிற்றுக்குச் சம்மதித்த பிறகு, மூலைவாரினால், சாட்டைதானே பேசும்! அதுபோலத்தான், கலையருவியிலே நீந்தி மகிழத் தொடங்கிவிட்டால், ஆரிய நாரைகளின் கூறிய மூக்கின் வேலையும் தொடங்கும்.

## சாதிப்பது கடினம்

சங்கீதம் என்ன சார் பிரமாதம்? சாரீரம் கொஞ்சம் நன்றாக இருக்கவேண்டும். சுருதியுடன் சேர்ந்து பாடவேண்டும். தாளம் தவறக் கூடாது. இவ்வளவுதானே என்று, பாட ஆரம்பிக்கும்போது தானே தெரிகிறது. சாரீரம் வித்துவானுடன் ஒத்துழைக்க மறுப்பதும், சுருதியுடன் அவர் மல்லுக்கு நிற்பதும், தாளம் அவருக்குச் செய்யும் துரோகமும்! அதுபோலத்தான் சமத்துவம் சமதர்மம் போன்ற இலட்சியங்களைப் பேசுவது சுலபம், சாதிப்பது கடினம்.

## மேடைப் பேச்சு

திசை காட்டும் கருவி தீயோனிடம் சிக்கினால் கலம் பாறையில் மோதுதல் போல; அரசுகளை ஆட்டி வைக்கும் அளவுக்கு ஆற்றல் அமைந்த மேடைப் பேச்சு எனும் சக்தி—சாதனம் ஒரு சிலருக்கு மட்டுமே

கிடைத்து, அவர்களும் அந்தச் சக்தியைத் தவருன காரியத்துக்குப் பயன்படுத்துவதாளுல் மக்களின் நலம், பாறை மோதிய கலமாகும்.

## மாற்றம்

சிறிய ஜன்னலால் போதிய காற்று கிடைக்காவிடில், அதை இடித்துப் பெரிய ஜன்னல் வைக்கிரேும். பாலம் பலமற்றதாக இருந்தால், அதை மாற்றிப் பலப்படுத்துகிரேும். ஜுரம் செந்தூரத்திளுல் குணமாகாவிட்டால் ஜெர்மன் மருந்துகள் உட்கொள்கிரேும். இதிலெல்லாம் பழமையைக் கண் மூடிக்கொண்டு கைப்பற்றுவதில்லே. அதுபோலத்தான் கடவுளுணர்ச்சியிலும் மாற்றம் வேண்டும்; மாற்றம் செய்தாக வேண்டும்.

## சமர்த்து

கடைவீதியிலே கனிவிற்பவன் அழுகிய பாகத்தை அறுத்துப் போட்டுவிட்டு, மிச்சமுள்ள பாகத்தின் மதுரத்தைப் புகழ்ந்துரைத்து கிடைத்தவரையில் கிடைக்கட்டும் என்று பார்க்கிருனே; அதுபோல ஒரு சாராரும் சாம்பிள் பழம் இனிப்புத்துண்டாகக் கொடுத்துப் புளிக்கும் பழங்களேக் கூடையிலே நிரப்பிக் கொடுத்து விடுகிருனே, அதுபோலச் சிலரும் கலே வியாபாரம் செய்கின்றனர். கனியின் தன்மையல்ல வியாபாரத்தின் காரணம், விற்பவரின் சமர்த்து'

## கருத்து

மலர்கொண்டு மாலே தொடுத்தலிலே கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆளுல் கைத்திறன் முழுவதுங் காட்டி காகிதப் பூமாலே தொடுத்தால் பயன் என்ன? மாலேக்கு முதற்பொருள் மணமுள்ள மலர்.



அதுபோல பேச்சுக்கு முதற்பொருள் சுவையும், பயனும் உள்ள கருத்துக்கள்.

## விவேகம்

வெள்ளேக்காரன் எவ்வளவு விவேகத்துடன் உணர்ந்து கொண்டான். இனி நமது ஏகாதிபத்தியச் சரக்கு விற்பனேயாகாது என்பதை எவ்வளவு புத்தி சாலித்தனமாகக் கடையைக் கட்டிக் கொண்டான்; ஏன் அந்த விவேகம் பார்ப்பனச் சமுதாயத்தவர்களுக்கு இல்லே?

## சக்தி

அரைக்க அரைக்க சந்தனம் மணப்பதுபோல உங்கள் அடக்குமுறை அதிகரிக்கஅதிகரிக்க, திராவிட இயக்கத்தின் சக்தியைக் காணப் போகிறீர்கள்.

## பறிகொடுத்தல்

மதமெனும் முள்ளில், கலேயெனும் ஊன் அமைக்கப்பட்டிருப்பதறியாது, உணவெனக் கருதிச் சுவைத்திடச் சென்று, அவ்வழி ஆரியத் தூண்டிலிற் சிக்கி, வாழ்வினேப் பறி கொடுக்கின்றனர் தமிழர்.

## பயனில்லா வாழ்வு

பயனில்லாத வாழ்க்கை பரிமளமில்லாத புஷ்பத்தைப் போலிருக்கும்.

## அடிமைத்தனம்

அடிமைத்தனம், ஒரு கூட்டுச் சரக்கு.

### பாசம்

மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டு களுக்கும் ஏற்படும் பிரமைபோல, குழந்தைக்குத் தாயிடம் பாசம் ஏற்படுகிறது.

### தொழிலாளி

திராவிடத்தின் தொழிலாளரின் சக்தி அவிழ்த்து விடப்பட்ட நெல்லிக்காய் மூட்டைபோல கிடக்கிறது. சிதறுண்டு சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது. உருவாகும் உதயக்காட்சி தென்படவில்லை. கீழே முதலாளித்துவம் மேலே ஜாதிக்கொடுமை. இரண்டுக்குமிடையே அழுத்தப்பட்டு விழிகள் பதுங்க வேதனைப்பட்டுக்கொண்டு கிடக்கிறான் பாட்டாளி

### லாபம்

டில்லியோடு சேர்ந்திருப்பதால் என்ன லாபம்? பிரிக்காதிருப்பதால் என்ன நஷ்டம்? இரண்டிற்கும் புள்ளி விவரங்களைக் காட்ட முடியுமா? இது வரையாகிலும் நன்மைகள் உண்டு என்றுதான் கூற முடியுமா? எனவேதான் திராவிட ஆட்சியைவிட எந்த ஆட்சியும் நன்றாக இருக்காது.

### சமதர்ம திட்டம்

ஜாதிமுறை, சடங்குமுறை என்பனவெல்லாம் தந்திரமாக அமைக்கப்பட்ட பொருளாதார சுரண்டல் திட்டமே யாகும். ஆகவே ஜாதிமுறையை ஒழிப்பதும் சமதர்ம திட்டந்தான்.

# திருமணம் பற்றி.....

### நாம் வெற்றிபெற்றோம்.

இப்போது நடைபெறும் திருமணங்கள் பெரும்பாலும் பதிவு செய்து கொள்வதோடு முடிந்து விடுகின்றன. உற்றார் உறவினரோ, நண்பர்களோ அழைக்கப்படாமல், சர்க்கார் அதிகாரி முன்னிலையில் இரண்டொரு காட்சிகளுடன் தங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தைப் பணச் செலவு ஏதும் மின்றி முடித்துக்கொள்கிறார்கள். இது நாம் வெற்றி பெற்றோம் என்பதையே காட்டுகிறது.

### பழக்க வழக்கம்

கொட்டாவி விடும்போது எதிரே பூனை குறுக்கே வந்தால் சகுணம் சரியில்லையென்று திரும்பி விடுவதும், பல்லி சொல்லுக்குத் தரையைத் தட்டுவதும், அதற்கு பலன் பார்த்துப் பதைப்பதும் மக்களிடம் எப்படியோ ஏற்பட்டு விட்டபழக்கத்தினாலும், அறியாமையினாலுந்தான்.

### இந்தக்காலத்துப் பெண்கள்

இந்த காலத்து பெண்கள் தங்களுக்கு வரப் போகும் கணவன் அழகாக இருக்க வேண்டும். நல்ல குணவானாக, பண்புள்ளம் படைத்தவனாக இருக்க வேண்டும். வெளியில் செல்லும் போது தங்களையும் அழைத்துச் செல்ல வேண்டும். நல்ல நாகரீகமுடைய வனாக விளங்க வேண்டும். குடும்பத்தில் அக்கரையுடைய வனாகத்திகழவேண்டும் என்று தான் விரும்புகிறார்கள்.

## மாய்ந்தொழியும்

நாம் திராவிடர் நமது இனம் திராவிடம், நமது கலை, கலாச்சாரம் இவையாவை என்பதை மக்கள் நன்றாக உணர வேண்டும். அப்போது தான் பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மை வேரோடு அழியும். மதமூட நம்பிக்கைகள்! இருந்த இடம் தெரியாமல் மறையும், கருத்தற்ற கண்மூடிப் பழக்க வழக்கங்களும் மாய்ந்தொழியும்.

## வாதிட முடியாது.

எந்தக்காரணங்களைக் கொண்டு பார்த்தாலும், நாம் சீர்த்திருத்தத்திருமணம் நடத்தும் முறை தவறு எனறு எடுத்துக் காட்டவோ அல்லது பழைய முறை தான் சரி என்று வாதிடவோ ஒருவராலும் முடியாது.

## அடிப்படை வேலை

சுயமரியாதைப் பிரச்சாரம் தான், சமுதாயச் சீர்திருத்தமும், முன்னேற்றமும்தான் தி. மு. கழகத்தின் அடிப்படை வேலையாகக் கருதப்பட்டு வருகின்றது.

## எங்கள் கழகம்

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கருத்துடன் வாழ்ந்த திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்பதை மக்கள் உணர்ந்து, இனத்தால் ஒன்றுபட்டு வாழும் முறையை மக்களிடையே எங்கள் கழகம் ஏற்படுத்தி வருகின்றன.

## தடுத்தாக வேண்டும்

கடவுள் என்றும் மதமென்றும் சாஸ்திர சடங்குகள் என்றும் மக்கள் தங்கள் காலத்தையும் உழைப்



பையும், ஊக்கத்தையும், கருத்தையும், நினைப்பையும், பணத்தையும் பகுத்தறிவையும் சிறிதும் பயன் படுத்தாது பாழாக்குவதைத் தடுத்தாக வேண்டும்

## கழகம் பாடுபட்டு வருகிறது

மக்களைப் பழமைப் பிடியிலிழிந்து மீட்டு, பகுத்தறிவுப் பாதையிலே நடத்திச்செல்ல திராவிட முன்னேற்றக் கழகம் பெரிதும் பாடுபட்டுவருகின்றது.

## திருந்த வேண்டும்

நாங்கள் எடுத்துக்காட்டி விளக்குவதும் ஆபாசங்கள் என்று கூறிக்கண்டிக்கும் ஆண்டவன் திருவிளையாடல்களும் எங்கள் கற்பனைகள் அல்லவே அல்ல, அவைகள் அத்தனையும் பக்தர்கள், பக்தியோடு படித்துப் பாரரயணம் செய்து வரும் புராணங்களில் காணப்படுபவைகள் தான் என்பதை ஆத்திக நண்பர்கள் உணர்ந்து திருந்த வேண்டும்.

## கூடாது

காமக்குரோதம் மிகுந்த அக்கினி பகவானை அழைத்து அவனைச் சாட்சியாக வைத்துத் திருமணம் நடத்துவது அறிவுக்குப் பொருத்தமானது தானா? அதைப்போலவே கண்மூடித்தனமாக நடந்து காமக்களியாட்டங்களில் ஈடுபட்ட மற்ற கடவுளையும் திருமணக்காலங்களிலே எண்ணுவதும் கூடாதே.

## புதுவாழ்வு

பழையகாலத்துக் கதையைப் போல நாம் நடக்க முடியாது, நடக்கத் தேவையுமில்லை, புதிய கருத்துக்களைத் தைரியத்துடன் கவனித்து ஏற்று புது வாழ்வு நடத்த நம்மை நாம் தயாராக்கிக் கொள்ள வேண்டும்.

## இவர்களா நமது வழிகாட்டிகள்?

புராணங்கள் சொல்லுகிறபடியே பார்த்தாலும் எந்தக் கடவுளும் யோக்கியமான கடவுளாகத் தெரியவில்லை! பிரமன் திலோத்தமையை கெடுத்தான், இவன் தாருள வனத்து ரிஷிபத்தினிகளைக்காமுற்றான் இந்திரன் அகலியையும், சந்திரன் குருபத்தினி தாரகையையும் மகாவிஷ்ணு சந்திரன் மனைவியையும் கெடுத்தனர் இப்படித்தான் புராணங்கள் சொல்கின்றன. இப்படிபட்ட ஒழுக்கக் கேடான கடவுளரையா நாம் நமது வாழ்வின் வழிகாட்டியாகக் கொள்வது?

## எதற்காக?

திருமணத்தில் அக்கினி வளர்ப்பது எதற்காக? திருமணத்திற்கு அக்கினித் தேவன் சாட்சியாக இருக்கிறான் என்பதற்குத்தானே? அந்த அக்கினிபகவான் யோக்கியதை என்ன? அருந்ததி என்று ஒரு சினிமாக் கூட வந்ததே. அதைப் பார்த்தவர்களுக்கே நன்றாகத் தெரியும். பிறர்மனைவியைக் காமுறும் தீயகுணம் படைத்த அக்கினியையா நம்முடைய திருமணக் காலங்களிலே சாட்சிக்கு அழைப்பது? கூடாது, கூடவே கூடாது.

## மூடக்கொள்கைகள் ஒழிய...

சுயமரியாதைத் திருமணங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கத் தொடங்கிவிட்டால், நாட்டிலே பரவிக் கிடக்கும் மூடக்கொள்கைகள் தாமாகவே சிந்துவாரற்றுப் போய்விடுமே!

## கிடைப்பார்களா?

மக்கள் வாழ வேண்டும், உலகம் உருப்படவேண்டும், வறுமை ஒழிய வேண்டும், உலகத்தில் உண்மை



தான் தழைக்க வேண்டும், என எந்த முனிவராவது; எந்தப்பக்தனாவது நாயன்மாராவது கேட்டிருக்கிறார்களா? இல்லையே? பொது நன்மைக்காகக் கடவுளை வரம் கேட்ட பக்தர்கள் யாராவது காட்ட முடியுமா? ஒருவரும் கிடைக்க மாட்டார்கள்.

## இதுவா வீரம்

எங்கோ ஒரு இடத்தில் பாரதப் பிரசங்கம் நடந்ததாம். அதன் கடைசி நாளன்று பீமன் வேஷம் போடுபவன் துரியோதனனைக் கொல்வதற்காகப்படுகளம் நடந்தது. துன்டு 5 அடி நீளமுள்ள துரியோதனன் உருவம் மண்ணினால் செய்யப்பட்டிருந்தது. இதனை பீம வேட தாரி வெட்டி வீழ்த்தினான். இதனைச் சுதேசமித்திரன் பத்திரிகை படம்பிடித்து பெரிதாகப் போட்டுக் காட்டியிருக்கிறது இப்படிப் பட்ட படத்தைப் பார்க்கும் வெளிநாட்டான் என்ன நினைப்பான்? "இன்னமும் இந்த நாடு மண் பொம்மை வெட்டுவதில் தான் வீரம் காட்டுகிறது! என்று தானே கருதுவன்?

## உணர வேண்டும்

நாம் அறிவுத் துறையால் முன்னேற்ற மடைந்தால்தான் நம்மிடமுள்ள பழமைகருத்துக்கள் அகலும் பாசி பிடித்துப்போன கண்மூடிப்பழக்கங்களும் தொலையும், மதமூட நம்பிக்கைகள் முறியடிக்கப்படும் என்பதை நாம் உணரவேண்டும்.

## தேவை தானா?

கோவைக்கு அருகிலுள்ள சாத்தமடை என்கிற ஊரில் நடக்கும் அர்த்தமற்ற ஆபாசத் திருவிழாவும் இருக்கிறது அங்கே அனுமார் ஆவேசமாகும் ஒரு சாமி

யார் வாயிவிட்டு மென்று கீழே துப்பும் எச்சல் வாழைப்பழத்தைப் புசிப்பதால் பிள்ளைப்பேறு கிடைக்குமென்று நம்பி, எத்தனையோ பெண்கள் எடுத்துப் புசித்து வருகிறார்களே! இதெல்லாம் சரியா இந்தக் காலத்திற்கும் தேவை தானா?

### கூடாது.

எந்தக்காலத்துப் பழக்கமானாலும் சரி அது இந்தக்காலத்துக்குப் பொருந்துகிறதா? வாழ்க்கைக்குத் தேவையானது தானா? அறிவுக்கு ஏற்றதா? என்றுதான் நாம் பார்த்துப் பின்பற்ற வேண்டுமே தவிர அந்தக்காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணைமூடிக் கொண்டு எதையும் அர்த்தமற்றும் பொருத்தமல்லாமலும் பின்பற்றக் கூடாது.

### முன்னேறியாக வேண்டும்

உலகில் மற்ற நாடுகள் எவ்வளவோ முன்னேற்றமடைந்துள்ளன. இந்நாடு மட்டுந்தான் எல்லாத் துறைகளிலும் பழம்பெருமை பேசிக்கொண்டும், அந்தக்காலம் என்று கூறிக்கொண்டும் முன்னேறாமல் பின் தங்கிக்கிடக்கிறது. நாமும் மற்ற நாடுகளைப் போலவே எல்லாத்துறைகளிலும் முன்னேறியாக வேண்டும். அதிகம் சிறப்பாக அறிவுத் துறையில் முன்னேறியாக வேண்டும்.

### என்ன பயன்

அந்தக் காலம் எந்தக்காலம் என்பதைக் கூறி விடாமல் வெறும் அடிமூச்சுக் குரலால் அந்தக்காலம் அழிவதா? அந்தக்கால ஏற்பாடுகள் தொலைவதா? என்று உரத்துப் பேசுவதால் என்ன பயன்?



### அந்தக் காலத்தில்

இராமன் காலத்தில் இரயில் கிடையாது. ஆகவே ரயில் கூடாது என்று தள்ளி விட முடியுமா? அல்லது இராமரே ஏறாத இரயிலில் நாம் ஏறுவதா? என்று ரயிலில் ஏறாமல் எத்தனை இராமபக்தர்கள் இருக்கிறார்கள் இருக்கமுடியும்? இராமர்காலத்தில் இல்லாத இரயிலில் ஏறித்தானே இராமேசுவரம் போகிறார்கள். அதைப்போலவே அரிச்சந்திரன் காலத்தில் தபால் கார்டு இல்லை. தந்தி கிடையாது என்று தள்ளி விடுகிறார்கள், கிடையாதே! இதுவே அந்தக்காலம் அந்தக் கலாம் என்று பிடிவாதமாகப் பேசுவது பொருத்தமற்றவைகள் என்பது நன்கு விளங்குகிறது.

# காதலைப் பற்றி

**காதலன்**

கதிரோன் நிலை இருந்தாலும் காதலைக்குலைக்க முடியாது. அது அடங்கினாலும் காதலன் மனதில் அவள் எழுப்பும் ஆவல் அடங்காது. அவனெதிரிலேயே பொற்குன்று அமைத்துத் தந்து இதை ஏற்றுக்கொள் என்று இயம்பினாலும் பூங்கொடியின் ஓர் புன்னகைக்கு இந்தக்குன்று கடுகத்தனையும் ஈடாகுமோ'' என்றே கூறுவான்.

உயிரும் உடலும், மலரும் மணமும், நரம்பும் நாதமும், மணியும் ஒளியும், கனியும் ருசியும் பிரியுமோ? பிரியின் பயனுள்ளதாமோ. அதுபோன்றதே காதல்.

### கன்னியை களவாடுபவன்

கனியைக் களவாடுபவனைவிட கன்னியரை களவாடுபவன், கட்டுத் திட்டம், சட்டம் சாத்திரம், ஆகி

யவைகளின் பிடியிலா சிக்குவான்? முள் வேலியைத் தாண்டிவிட்டோம் என்று கருதிச் சிரிப்பான்.

## முடிவதில்லை

என்ன காரியம் செய்தோம்? தம் வயதென்ன? வாழ்க்கை எப்படிப்பட்டது? எவ்வளவு பாசுரம் படித்தோம்? எத்தனை திருக்கோயில் வலம் வந்தோம்? காமத்தின் கேடு பற்றி எத்தனை புண்ணியகதைகள் படித்திருக்கிறோம்? ஒரு கன்னியை அவள் நிலை தவறும் படி செய்வது தருமா? இவ்வளவு மோகாந்தகாரத்தில் மூழ்குவது சரியா? என்று சிந்திக்கத் துளியும் முடிவதில்லை.

## நினைப்புவருமா?

அவளுடைய அதரம்! அதன் துடிப்பு! அவளுடைய விழிகள், அவை கொண்டை போல ஆடுவது! அவளுடைய துடியிடை! குழையும் பேச்சு! இவை கண்டு ரசிக்கும் நேரத்தில் வேறு விதமான நினைப்பு வருமா?

## அந்த இதழ்

இருகண்கள் இருதயத்தை எவ்வளவுபாடுபடுத்தி விடுகின்றன! அந்த இதழ் கிடைப்போருக்குத்தரும் இன்பம் எத்துணை! கிடைக்கப் பெறுதவர்க்குத் தரும் இன்னல் எவ்வளவு?

## சல்லாபத்திற்காக

ஒரு தாசியின் சல்லாபத்திற்காக சாம்ராஜ்யங்கள் சிதைந்ததுமுண்டு. மோகனுங்கிக்காக ஒருவர்மீதொருவர் மோதிக்கொண்டு மோசம் போனதுண்டு.



## குளிர்ப்பார்வைக்க...

தான் கோரும் மாதின் ஓடைக் குளிர் பார்வைக்காக, ஓராயிரம் வீரர்களை ஒருங்கே எதிர்க்கவும் உள்ளம் இடம் கொடுக்கும்.

## கடைக்கண் வீச்சு

விண்ணும் மண்ணும் அதிர வெறியாட்டமாடி வரும் விரோதிக் கூட்டத்தைக் கண்டும் கலங்காத வீரன் வேல்விழியாள் முன்பு வீழ்ந்து விட்டதற்குச் சரித்திரத்தில் ரசமான சம்பவம் ஆதாரமாக உண்டு. வாள்வீச்சுக்கு அஞ்சாத வீரன் கன்னியின் கடைக்கண் வீச்சால் வீழ்ந்ததுண்டு.

## நெஞ்சையே நீக்கவேண்டும்

நெஞ்சிலே புகுந்து நேரிழையாளை நீக்கவேண்டுமானால் நெஞ்சையே நீக்க வேண்டும்.

## அவளாலே

சமரும் பெண்ணாலே, சாந்தமும் அவளாலே.

## காதலிலிருந்து

வீணையிலிருந்து நாதம் பிறக்கும். மலரிலிருந்து மணம்தோன்றும்; காதலிலிருந்தோ கவி, சித்திரம் ஓவியம் எல்லாம் தோன்றும்.

## காதல்

காதல் வஞ்சமற்றது. எவ்விடத்தும் சமத்துவம் பாராட்டக்கூடியது. வாலிபர் வாழ்க்கைக்கு உயர்வும் ஊக்கமும் அளிப்பது காதல்தான்.

காதல் விஷயம் தீயது மன்று அபாயமானது மன்று. கெட்டமனம் முடையவர்களுக்குத்தான் காதல் விஷயத்தில் பயமும் அபாயமும் தோன்றும்.

வீரம், தன்னலமறுப்பு, சகிப்புத்தன்மை, பரோபகாரம், முதலிய உயரிய பண்புகளுக்கும் காதலே விசேஷ ஆதரவளிக்கும் இயல்பினதாகும்.

## காதல்

இளமைப்பருவத்தைத் தட்டியெழுப்பி வளர்வதற்கான காரணச் சக்தி காதலின் விளைவேயாகும். மக்களின் வாழ்வின் இன்பச்சுவை மிகுந்த எதிர்காலத் திட்டம் போடுவதும் காதலின் சக்தியே யாகும்.

வாழ்க்கைக் கலையிலே மிக முக்கியமான ரசமான கட்டம் காதல்.

ஆணையும் பெண்ணையும் சேர்த்துவைக்கும் ஓர் வானவில் போன்றது காதல்.

ஒரு பெண்ணின் புன்னகை, ஆடவனின் மனதைப் படுத்தும்பாடு, அனுபவித்தவரே அறிவர்.

## அணுகுதல் கூடாது

தேனை மொண்டுண்ணும் தேனீயைக் கலைத்தலோ, நாதத்தின் ரசத்திலே மூழ்கியிருக்கும் இசைவாணனிடம் பேசுவதோ, இயற்கையின் எழிலில் இலயித்திருக்கும் ஓவியக்காரனிடம் சென்று ஓவெனக் கூவுவதோ கூடாதன்றோ! அது போன்றே போகக் களத்திலே பிணைந்து கிடப்போரிடமும் அணுகுதல் கூடாது.



816

## பாகுமொழிதரும் சுகபோதை

மண்டலங்களை மறந்திடச் செய்வதும், கடமையைக் கூடத் துச்சமாகக் கருதிடச் செய்வதும், பாம்பை பழுதை யென்றெண்ணிடச் செய்வதும் பாவையரின் பாகு மொழிதரும் சுக போதையன்றோ? தம்மை மறந்து கவிவாணர் பாடிடுவதும் காரிகையின் கோலா கலக்கூத்தில் மூழ்குவதாலன்றோ!

சூரியனுக்குத் தெரிகிறதா, தாமரை தன்னிடம் லயித்தே மலருகிறது என்ற உண்மை. ஏன் மேகத்துக்குத் தெரியுமா மயிலின் நடனத்துக்குக் காரணம் தன்னிடம் அப்பறவை கொண்டகாதல் என்று.

காலம், விளைவு, முதலிய எதனையும் பொருட்படுத்தாது திடீரென்று கிளம்பும் ஜோதியன்றோ காதல்.

V2,11,2;9,7 N64

## அந்த நேரம்

மங்கையைத் தழுவ ஆவலோடு ஒரு ஆடவன் செல்லும் நேரம் எப்படி பட்டது? அந்தச்சமயத்திலே அவனுடைய உணர்ச்சியும், உயிர்த்துடிப்பும் உடல் பதைப்பும் எடுத்துரைக்கும் கவியும் உண்டோ? மலை கடுகாகவும்; பாம்பும் பழுதையாகவும் தோன்றுமாம் அப்படிப் பட்ட சமயத்திலே

## வாழ்க்கை இருப்பது......?

கனி கிடைப்பது ரசம் பருக, மலரிருப்பது மணம் நுகர, வாழ்க்கை இருப்பது இன்பக்கேணியில் குளிக்க.

## கணக்குத்தவறும்

காதலர்களைக் கணக்கெண்ணும் போதுதான் தவறுமே. பத்து ஐந்தாகும். பதினைந்து ஒன்பதாகும்

## வண்டு உலவும்

ஆடவர் வண்டுகள்; பெண்ணினம் மலர்; தேன் கண்ட இடத்தில் வண்டு உலவும்.

## அநுபவிக்கத் தெரிந்தவர்கள்

மணமுள்ள மலர், சுவையுற்ற கனி, சுந்தரமான மாது இவைகளிடம் அநுபவிக்கத் தெரிந்தவர்கள் அடிமையாகிறார்கள்.

## இன்ப இரவுக்கு

இன்ப இரவுக்குக் கடிகாரம் ஏது? கோட்டான் கூவினால் கூடக் குயிலின் நாதமாகவன்றோ அந்த நேரத்தில் தொனிக்கும். கருத்த மேகம் சூழ்ந்த வானமுங் கூட, தனி அழகாகத்தானே காணப்படும்! இன்பத்துடன் அளவளாவும் நாள் அமாவாசையாக இருந்தாலும் பௌரணமியாகி விடுகிறது.

## அழகு

அழகு ஓர் ஆபத்தான ஆயுதம்! ஆனால் பெண்களுக்குச் சரியான சமத்துவமும், சுதந்திரமும், வசதியும் கிடைக்கும்வரை அவர்கள் அந்த ஓரே ஆயுதத்தை உபயோகித்தே தீர வேண்டியவர்களாகிறார்கள். அந்த நிர்பந்தம் நீங்கிய பிறகுதான் அழகு ஆயுதமாகவோ ஆபத்தாகவோ இல்லாமல் இன்பக் காட்சியாக இருதயகீதமாக இருக்க முடியும்.

## தனிஇன்பம்

அன்போடு சாப்பாடு போட்டு, காலையிலே செய்த கறியிலே கொஞ்சம், எடுத்து வைத்திருந்து இரவிலே



போடுவதும், இன்னும் கொஞ்சம் ஒரே ஒரு பிடி" என்று உபசரிப்பதும், "என்னுங்க எவ்வளவு பாடு உங்களுக்கு? வயிறாரச் சாப்பிட வேண்டாமா? எல்லாம் உடலிலே பலமிருந்தால் தானே" என்று கனிவாகப் பேசும் போதும், "வரவரத் துரும்பாக இளைத்துப்போறீங்க" என்று வைத்தியரோடும் போதும் தலைவலிக்குத் தைலம் தடவும் போதும் அடடா அது ஒரு தனி இன்பமாகத்தான் இருக்கும்.

## விழிகளிலே

மாதரின் விழிகளிலே விஷமும் உண்டு தேனும் கிடைக்கும்.

## சிரிப்பு

பெண்கள் களங்கமற்று கலகலவெனச் சிரித்துக் கொண்டிருக்க வேண்டும். சுடுமூஞ்சியாக இருக்கக் கூடாது. ஆனால் அச் சிரிப்பு சிலந்திக்கூடாக இருக்கக் கூடாது.

## கோப உணர்ச்சி

வெங்காயச் சாறு கண்ணிலே பட்டால், விழியில் நீர் வழிவது போல, பெண்களின் கோப உணர்ச்சியும், பழிவாங்கும் எண்ணமும் கிளப்பிவிட்டு விட்டால் எந்த ஆணும் அழுதுகொண்டுதான் இருக்க வேண்டும்.

## இப்படி இருக்கவேண்டும்

அடக்கம் இருக்க வேண்டும், ஆனால் அசடாக இருக்கக்கூடாது. புத்தியிருக்க வேண்டும் ஆனால் போக்கிரித்தனம் இருக்கக்கூடாது. அழகு இருக்க

வேண்டும், ஆனால் ஆளை மயக்கும் நோக்கம் இருக்கக் கூடாது. படிப்பு இருக்க வேண்டும், ஆனால் படாடோபம் இருக்கக்கூடாது. சகஜமாப் பழகவேண்டும், ஆனால் சந்துபொந்து திரியும் சுபாவம் கூடாது.

## அதிமுக்கியம்

ஒரு பெண்ணைக் கண்டு ஒருவன் மோகிக்கலாம், என் வாழ்வின் மலர் இவள் என்று கருதலாம். மணந்தால் இவளை மணப்பேன் இல்லாவிடில் உயிர் துறப்பேன் என்று கூறலாம்! ஆனால் அவன் காதலிக்கும் பெண் அவனை விரும்பாவிடில் சாஸ்திரப் பொருத்தம், குடும்பப் பொருத்தம், கோத்திரப் பொருத்தம் எது சரியாக இருந்தாலும் அந்தப் பெண்ணின் மனப் பொருத்தம்தான் அதிமுக்கியமானதாகக் கருதப்பட வேண்டும்.

## காதலில் வேறொருவன்

"உருகி, உடல் கருகி உள்ளீரல் பற்ற" விடும் காதல் சம்மதக் கண்ணளியால் தணிக்கப்பட்டு, காதல் விளையாட்டுக்களால் சாந்தியாக்கப்பட்டு, இன்ப வெள்ளத்தில் மூழ்கி இருக்கும் ஒருவருவருக்கு தன் காதலில் பிறரொருவன் புகுவதாகவோ, கெடுக்கவோ, கண்டால் கோபமும், கொதிப்பும் உள்ளத்தின் அடிபாரத்திலிருந்து கிளம்பும்.

## எத்தனை எத்தனை

சமூகத்தில் வளர்த்து விடப்பட்ட பழக்கதிற்கு அழகையும், இளமையும் பலி கொடுக்கப் போகிறாள். இவ்விதம் அழிந்த "அழகிகள்" எவ்வளவு! தேய்ந்த இளமை எத்தனை!



## ஆண்கள் கதை

காதலும் சாதலும்; அதெல்லாம் புத்தகத்தில், நாடகத்தில், சினிமாவில். உலகத்திலே கண்ணுக்கு ஏற்றதைக் கிடைத்தவன் கொள்வதுதான் காதலாக இருக்கிறது. கமலாவின் முகத்தில் நீரோட்டம் இருக்கும்வரையில் கமலாவிடம் காதல், பிறகு விமலா, பிறகு சாமளா. ஆண்கள் கதையே அதுதான்.

## காதல் செல்வம்

செல்வம் ஒருவருக்கு இருந்து மற்றொருவருக்கு இல்லாது போவது அவ்வளவு அதிகமான பொருமையைக் கிளப்புவதில்லை. அது "கொடுத்துவைத்தான்" "ஆண்டவன் அருள்" "பூர்வ ஜென்மபலன்" என்ற சமாதானங்களால் சாந்தியாகிவிடும். ஆனால், காதல் செல்வத்தின் விஷயம் அங்ஙனம் அன்று.

## அந்தக் கண்கள்

இசைந்த உள்ளத்தை எடுத்துக்காட்டும் விழி அமிர்தத்தை அள்ளி அள்ளி ஊட்டும்! இல்லை! போடா மூடா! எட்டநில்!—என்ற இருதயத்துக்கு ஈட்டி போன்ற பதிலை தரும் விழிகள், நஞ்சு தரும்! ஆம்! அமிர்தம் உண்டு ஆனந்தப் பட்டவர்களும் உண்டு, நஞ்சு கண்டு நலிந்தவர்களுமுண்டு! ஒரே பொருள் இருவகையான செயலுக்குப் பயன்படுகிறது.

## அந்தக் காதல்

காதல் என்பது இருவர் மனது லயிப்பது சுருதியில் சேர்ந்த சங்கீதம் போன்றது. மலரின் மணம் இருப்பது போன்றது. மதியில் குளிர்ச்சி இருப்பது போன்றது.

### கண்ணீர்

வயோதிகரை மணந்து வேதனையுடன் போரிடும் புனிதவதிகளின் விழிகளிலே வழிந்தோடிய நீர் இந்த நாட்டையே அரித்து வருகிறது.

### மாதர்தம் விழியில்

அழகு களிப்பதற்கு எங்ஙனம் உதவுகிறதோ அதைப்போலவே பிறரை அழிக்கவும் செய்கிறது. எனவேதான் புலவர்கள், மாதர்களின் விழியிலே அமிர்தமும் உண்டு, நஞ்சும் உண்டு என்றனர்.

### அவளின் அழகு

அவளோ அழகி, இளமையும் எழிலும் ததும்பும் தங்கச்சிலை! கண்களோ! கனிரசக் கலசங்கள், நடை, மயிலைப் பழிக்கும்—குரல், குயிலைப் பழிக்கும் விதத்தது? களங்கமற்ற நிலவு அவள் முகம் இன்ப வல்லி—இருதயராணி—ஆமாம்—அவளின் பேரழகு ஆஸ்ரமத்தையும் அரண்மனையாக்கிவிடும்.

### சித்திரவதை

ஒரு இளமங்கையைக் கிழவனுக்குக் கலியாணம் செய்வதென்பது, அவள் வாழ்க்கையைச் சித்திர வதை செய்வதாகும்.

# விதவைகளைப் பற்றி

### பருவ இச்சை

எவ்வளவு அழகு! அழகு தங்கும் பருவம். பருவ அழகு கொண்டுள்ள அங்கங்கள்! அங்கங்களைத் தாங்கிக் கொண்டுள்ள தங்கக்கொடி! அப்படிப்பட்டவளுக்குக் கணவன் இல்லை. கைம்பெண், நிலவுக்குத் திரையிட்டுவைப்பது போல, புனுகு ஜவ்வாதைச் சிமிழியில் இட்டு மூடி வைப்பது போல, கைம்பெண்ணின் அழகைக் கட்டுப்பாடு என்ற பெட்டிக்குள் மூடி வைத்திருக்கிறார்கள் பெட்டிப் பாம்பு போலவா படுத்துக்கிடக்கும் இச்சை? அது பெட்டிக்கு அடியிலே துவாரம் செய்து கொண்டு வெளிவந்து விடுகிறது.

### மூடுவதா ?

காந்தத்தை ஏவிவிட்டு இரும்புக்கு சட்டம் இடுவதா? முடியுமா? வீணையை மீட்டிவிட்டு, இசை எழும்பக்கூடாது என்று கட்டளை இடுவதா? முடியுமா? முட்டாள் அல்லவா செய்வான் அதனை?

### வேறென்ன வழி இருக்கிறது

கொடுமைக்கு ஆளாகும் போது, கட்டினவனால் கைவிடப்படும்பொழுது, காமுகர்களால் தாக்கப்படும் பொழுது, கஷ்டம் தாங்க மாட்டாத வேலைகளிலெல்லாம் பெண்களுக்குத் தலையில் அடித்துக் கொள்வது தவிர வேறென்ன வழி இருக்கிறது.

## தாலிகட்டினால் என்ன?

தாலி கட்டினால் என்ன? அது என்ன மாட்டுக்கு மூக்குக்கயிறு போடுவது போலவா? தாலிகட்டினான் என்றால், ஒரு வீட்டுப் பெண்ணை, சுகமாக கௌரவமாகக் காத்து ரட்சித்து வருகிறேன் என்று சத்தியம் செய்து கொடுத்தது என்று தானே அர்த்தம்.

## பருவம்

அலை மோதிடும் மனம்- அதை அடக்க முடியாத பருவம் நாளுக்கு நாள் அலையின் வேகம் அதிகரித்துக் கொண்டிருந்தது. குற்றம் அவளுடையதா? சேச்சே! அவள் என்ன செய்வாள்? பருவம் அவளைப் பணியவைத்தது.

## இளம் விதவையின் எழில்

முல்லை கொடியிலே பூத்திருக்கும்போது, சாலையிலே நடப்பவன் அந்த நறுமணத்தை ருசிக்கிறான். அதற்கு முல்லை என்ன செய்வது?

## பெண்கள் வாழ்க்கை

புருஷன் இருக்கும் நாட்களிலே தலைதலை என்று தலையில் அடித்துக் கொள்வது; அவன் இறந்தால் நேரில் அடித்து கொண்டு அழுவது என்றபடி தானே பெரும்பாலான பேதைப் பெண்களின் வாழ்க்கை இருக்கிறது.

## விதவையின் நிலை

பெண்தானே! பருவமங்கையாயினும், பட்டாடை உடுத்திக் கொண்டு பள்ளாங்குழி ஆடி விளையாடும் சின்னஞ் சிறு சிறுமியாயினும், மணமாகி பின்



னர் கணவன் பிணமானால் விதவையாகி விடவேண்டும். இளமை இருக்கலாம் ஆனால் இன்பவாழ்வுக்கு அவள் அநுமதி பெற அந்தக் கூட்டம் அநுமதிப்பதில்லை. அவளது விழி, உலகில் உள்ள வனப்பான வாழ்க்கைச் சித்திரங்கள் மீது பாயலாம். ஆனால் என்ன பயன்? விம்மி விம்மி வாழலாம் விதவைக் கோலத்துடன். இல்லை விபச்சாரி யாகலாம். மறுமணத்துக்கு மார்க்கம் மலர் தூவியதாக இல்லை. கல்லும் மண்ணும், முள்ளும், குருட்டுக் கொள்கையின் முரட்டுப் போக்கும், சாத்திர மெனும் சேறும்நிரம்பியதாகவன்றோ' இருக்கிறது. அவள் பதினெட்டு ஆண்டுள்ள பாவையாக இருக்கலாம், மலர்ந்த மலராக இருக்காலம். வாடை சுற்றுப்பக்கம் எங்கும் வீசலாம். அவளது தகப்பனார் தனது மூன்றாம் மனைவியுடன் கொஞ்சிக் குலாவும் காட்சி அவளது கண்களில் படலாம். ஆனால் பூவிழந்தபூவை புத்தி கெட்டவர்களின் போக்கிரித்தனமான பொறியாகிய வைதீகத்தால் வாட்டப்பட்டு, நீலநிற வானத்திலே நின்றுவிடவும் நிலாவைக்கண்டும், பாதிராத்திரி வேலையிலே பலப்பல எண்ணியும், பாழானவாழ்வு வாழ வேண்டும். இல்லையேல் தொட்டிலில் கிடத்திச் சீராட்டி பாலூட்டி வளர்க்க வேண்டிய குழந்தையை பாழுங்கிணற்றில், கழுத்தை நெரித்து வீச வேண்டும். பேதைப்பெண், ஏன் இவ்வளவு துடுக்கு? இவ்வளவு பதைப்பா? என்று "பெரிய பெரிய" மனிதர்களெல்லாம் கேட்பர் கோபத்துடன். எனவே பசித்தப்பாவை பஞ்சத்தில் அடிபட்டு நசித்து விடுவாள்.

## விதவையின் உள்ளக்குமுறல்

நான் விதவையானேன். சகுனத்தடையானேன்— சமுதாயத்தின் சனியனானேன் தீமிதித்தவள் போல் திகிலடையக்கூடிய. உருவைப் பெற்றேன். ஆனால்

என் இளமையும், எழிலும் போகவில்லை. என் கண்ணொளி போகவில்லை. நான் அபலையானேன். ஆனால் அழகியாகத் தான் இருந்தேன். தாலி இழந்தேன், சாய்ந்த தளிர் போலிருந்தேனேயன்றி சருகாக இல்லை. குங்குமமிழந்தேன். ஆனால் பொட்டிடாத என் நெற்றியும் பொலிவுடன் தான் இருந்தது. நான் வாடாத பூவாக இருந்தேன். ஆனால் விஷவாடை உள்ளமலர் என்று என்னைக் கருதிற்று.

## இளம் விதவையின் தவிப்பு

அவளுக்கு எல்லாம் இருக்கிறது. அர[illegible] அந்தஸ்து, அழகு, இளமை, செல்வம்யாவும், இருக்கிறது பயன் என்ன? அவளை அணைத்துக்கொண்டு 'அன்பே! ஆருயிரே! இன்பமே!' என்று கொஞ்சிக் குலவிட ஒருவன் இல்லை. இது அவள் குற்றமுமல்ல! ஆடவரைக் காணும் போது மனம் என்ற கடிவாளததைப் பூட்டி இச்சை என்ற குதிரையை இழுத்துப் பிடிக்கிறாள். ஆனால் அந்தப்பொல்லாத குதிரை சும்மாவா இருக்கிறது! அவளைப் படாதபாடு படுத்துகிறது.

## விதவையின் வேண்டுகோள்

என் கண்களிலே தழும்பும் காதலை நோக்குங்கள். என் பெருமூச்சையும், இரவில் நான் புரளுவதையும் தலையணையைக் கண்ணீரால் நனைப்பதையும் நீர்கண்டதில்லை. நான் அபலை. என்னைக் கைவிடாதீர். அன்பே! எனக்கு உமது அருளைத்தர வேண்டுகிறேன்.

## நாயகனை இழந்தவளுக்கு

மணம் நடந்தது, நலிந்தது. அவள் நாயகனை இழந்தாள், நரம்புதன் முறுக்கை இழக்கவில்லை, நேத்திரத்திலே ஒளி குன்றவில்லை, நுதலிலே மதி தவழ்



கிறது, இதழே, கொவ்வை! இடை, கொடிதான்! குணமோ, தங்கம்! குயில் என்பர் குரல் கேட்டவர் கொஞ்சிடும் பருவம், கோப மயில் சாயில்!

## விதவையின்களிப்பு

நான் ஒரு விதவை. என்போல எண்ணற்றவர்கள், இளமையும் எழிலும் என்னிடம் இருந்தது. காமப்பித்தமும், கற்றக்கருத்தும் கொண்ட குற்றச் சமுதாயத்தைக் கண்டேன். சமுதாயக் கட்டுப்பாடு என்[illegible] இரும்புக் கரத்திலே நான் சிக்கித் தவித்தேன். அக்[illegible]களை உடைத்தெறிந்து என்னைக் காதல் உலகிலே குடியேறச் செய்தார் ஒரு கட்டழகர்.

## தொண்டும் தொண்டரும்

'வெடித்துக் கிடக்கும் வயல், படர்ந்து போகும் நிலையில் உள்ள விளக்கு, பட்டுக்கொண்டே வரும் நிலையில் உள்ள மரம், உலர்ந்துகொண்டுவரும் கொடி, வற்றிக்கொண்டிருக்கும் குளம்-இவைபோல, சமுதாயத்தின் நிலையும் நினைப்பும் நடவடிக்கையும் ஆகிவிடும் போது, இந்த அவல நிலையைப் போக்கியாக வேண்டும் என்ற ஆர்வமும், போக்கமுடியும் என்ற நம்பிக்கையும், போக்கக்கூடிய அறிவாற்றலும்கொண்டு ஒரு சிலர் முன் வருகிறார்கள். அறிவுப் பண்ணைக்குப் பணியாற்ற அவர்களை நாடு வரவேற்பதில்லை. நையாண்டி செய்யும்; மதிப்பளிப்பதில்லை—மாச்சரியத்தை வாரி வீசும்; துணை புரிவதில்லை—தொல்லைதரும். எனினும் அந்த ஒரு சிலர் ஓயாது உழைத்து, சலிப்பு, கோபம், வெறுப்பு, பகை எனும் உணர்ச்சிகளுக்குப் பலியாகிவிடாமல், புன்னகையும் பெருமூச்சும் கலந்த நிலையில் பணிபுரிந்து, பட்ட மரம் துளிர் விடும்வரை, படர்ந்து போக இருந்த விளக்கு மீண்டும் ஒளிவிடும் வரையில் பாடுபட்டு, வெற்றி கண்டு மறுமலர்ச்சி உண்டாக்கிவைக்கிறார்கள்.''

## காமராஜர் காட்டும் பூகோளம்!

"நான் சரித்திரத்தையும், பூகோளத்தையும் படித்ததினால் திராவிட நாடு கேட்கிறேன்! காமரராஜர் நல்ல வேளையாக இதை யெல்லாம் படிக்கவில்லை" என்று ஒரு கூட்டத்தில் சொன்னேன்! காமராஜர் இதற்கு பதில் தரும் வகையில் ஒரு கூட்டத்தில் பேசினாராம்! "நான் பூகோளம் படித்ததாக எங்கும் சொல்லவில்லையே? என்ன பூகோளம்! நீங்கள் ஏட்டிலே எழுதி இருப்பதை படித்திருப்பீர்கள்! நான் பூகோளத்தை நேராக பார்த்திருக்கிறேன்" என்று கூறினாராம்!

தூத்துக்குடியையும், பாளையங்கோட்டையையும், பண்ணுருட்டியையும் நேரில் சென்று பார்த்துவிடலாம்! பாரீஸ் பட்டணத்தையோ, லெனின்கிராடு நகரத்தையோ சுலபமாக நேரில் பார்க்க முடியாது! நேரில் பார்த்தவர்கள் எழுதியதை படித்துத் தான் தெரிந்து கொள்ள முடியும்! ஆனால், காமராஜரோ பாளையங்கோட்டையையும், பண்ணுருட்டியையும் தான் பூகோளம் என்று கருதுகிறார் போலும்!

## நாம் நொண்டிகள் அவர்களோ குருடர்கள்!

"பத்து நொண்டிகள் சேர்ந்துகொண்டு ஒரு திடகாத்திர மாணவனை என்ன செய்ய முடியும்" என்று காமராஜர் கேட்டாராம்! எதிரி திடகாத்திரமானவனாக இருந்தால் நொண்டிகளால் ஏதும் செய்ய முடியாது! ஆனால் எதிரி குருடனாக இருந்தால் ஒருநொண்டியே போதும்! அவர்கள் குருடர்கள் என்பது மட்டுமல்ல—ரப்பை (கண்ணில் தசை) வளர்ந்த குருடர்கள்!

அவர்களுக்கு அந்த ரப்பையை தூக்கிப் பார்த்தால் தான் வெளி உலகம் தெரியும்! நாம் அந்த



ரப்பையை கொஞ்சம் தூக்கி "பாருங்கள் உலகத்தை" என்றால் "ஆமாம் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு தான் இருக்கின்றனர்" என்று சொல்லுகிறார்கள்! தூக்கியுள்ள ரப்பையை நாம் விட்டுவிட்டால் மறுபடியும் அவர்களுக்கு உலகம் தெரிவதில்லை! அந்த நிலைமையில் தான் மந்திரிகள் இருக்கிறார்கள்!

## பாம்புக்குப் பால்......பாமரனுக்கு மண்

"ஜார்ஜ் பெர்னாட்ஷாவை உங்களுக்குத் தெரியும் குறும்பாகப் பேசி அறிவைத் தூண்டுபவர் அவர் அவரிடம், 'மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர். மனிதன் தேவைப்படுகிறபோது சாப்பிடுவான்; மிருகம் கிடைக்கிறபோதெல்லாம் சாப்பிடும் என்றார்.

"ஆனால், இப்பொழுது நம் நாட்டில், மிருகத்தையும்விடக் கேடான நிலையில், மனிதன் கிடைக்கிறபோது மட்டுமல்லாமல், கிடைப்பதையெல்லாம் சாப்பிடும் நிலை ஏற்பட்டுள்ளது! புள்ளி விவரத்தைத் தான் சாப்பிட வேண்டும், சில வேளைகளில்.

"இந்த அரசாங்கம் மக்களுக்குச் சோறு போட மறுக்கிறது. சிங்கம், புலி, நரி, குதிரை போன்ற மிருகங்கள் கூடப் பட்டினியால் செத்ததாகக் கேட்டதில்லை; பாம்புக்குக்கூடப் புற்றில் பால் வார்க்கப்படுகிறது; ஆனால் இந்த நாட்டில் மனிதன், உண்ணச் சோறில்லாமல் பட்டினியால் சாவதைப் பார்க்கிறோம்!

"இந்த ஆட்சிக்கு நாகரீக ஆட்சி என்ற பெயர் வேண்டாம்; மேலும் நீங்கள் பழி தேடிக் கொள்ளாதீர்கள்—என்று ஆட்சியாளருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எங்கள் கையை விட்டு மக்கள் போகாமல் நாங்கள் அதிக நாள் பார்த்துக்

கொண்டிருக்க முடியாது. கொஞ்ச நாட்கள்—எங்களால் முடிந்தவரைதான் மக்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியும். எங்களையும் மீறி மக்கள் சென்றுவிட்டால், பிறகு எங்களால் கட்டுப்படுத்த முடியாது.

"பிரான்சு நாட்டு வரலாற்றை அறிந்தவர்களுக்கு—ரஷ்ய நாட்டு வரலாறு புரிந்தவர்களுக்கு—பர்தோலி வரலாறு படித்தவர்களுக்கு இந்த உண்மை புரியும்! ஆட்சியாளர்கள் அந்த வரலாறுகளைப் படித்துப் பார்த்து, உணவுப் பிரச்சினை அதிகப்பட்டால் ஆள்வோர் என்ன ஆனார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளட்டும்!"

## பயம்வேறு! பக்தி வேறு!!

"சமுதாய நலத்திட்டத்தின் மூலமாக நீங்கள் நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டும் என்று கருதுகின்ற காரியங்களை எதிர்பார்த்து ஆளும் கட்சியாக இருந்துகொண்டிருக்கின்ற காங்கிரஸ் கட்சியில் இருக்கின்ற உங்களுக்கு மக்கள் காட்டுகின்ற பயத்தை, நீங்கள், 'பக்தி' என்று நம்பிக்கொண்டிருக்கிறீர்கள்!

"மக்களை உங்களை நம்பி வாழ வேண்டியிருப்பதின் காரணமாக, அளித்த ஓட்டுக்களையெல்லாம் உங்களுடைய உண்மையான பலம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்! இவ்விதம் எல்லாவிதத்திலும் நீங்கள் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்! மக்களுடைய உள்ளங்கள் எல்லாம்—எண்ணங்கள் எல்லாம் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை நீங்கள் அறிந்துகொள்ள முயலவேண்டும்!"

## திராவிடநாட்டு எல்லைப் பிரச்னை

'திராவிட நாட்டுக்கு எல்லை எது?' என்று முதல் மந்திரி காமராஜர் கேட்கிறார்!



நாங்கள் திராவிட நாடுதான் கேட்கிறோம்! இத்தனை கிராமங்கள். இத்தனை நகரங்கள் கொண்ட திராவிடநாடு கொடு என்று கேட்கவில்லை!

மரத்தின்மீது ஏறி இருப்பவனைப் பார்த்து, "ஒரு பழம் பறித்துப்போடு" என்று கேட்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்! உடனே அவன், "இந்தப் பழத்துக்கும் தரைக்கும் இடையில் உள்ள தூரம் உனக்கு தெரியுமா?" என்று கேட்டால் என்ன அருத்தம்?

அதுபோன்றுதான், திராவிட நாடு கேட்கிறோம்: இத்தனை மைல் தூரம் இத்தனை ஊர்கள் கொண்ட திராவிட நாடு கொடு என்று கேட்கவில்லை?

நாளை தினமே திராவிட நாடு கொடுக்க ஒப்புக் கொண்டால், இன்றே எல்லையைச் சொல்கிறோம்! தெலுங்கு—மலையாளம்—கன்னடம்—தமிழ் ஆகிய 4 மொழிகள் பேசுவோர் வாழும் நாடு திராவிட நாடு என்று இப்பொழுது சொல்லுகிறோம். இந்த நாடு எத்தனை மைல் நீளம்—எத்தனைமைல் அகலம் என்பதை பின்னால் அளந்துகொள்ளலாம்!

திருமணத்திற்கு பெண் கேட்கிறோம்! பெண் கொடுக்க ஒப்புக்கொண்டால், பிறகு முகூர்த்த (திருமணம் நடக்கும்) நேரத்தை முடிவுசெய்து கொள்ளலாம்!

பெண் கேட்கும்பொழுதே முகூர்த்தம் எத்தனை மணிக்கு? நடனம் ஆடுவது யார்? பாடுவது யார்? வறுவல் என்ன, பொறியல் என்ன? என்றுகேட்டால், பொருத்தம் ஆகுமா?

முதலில் பெண் கொடுப்பதற்கு—திராவிட நாடு பிரிவினைக்கு ஒப்புக்கொள்ளட்டும்? மற்ற காரியங்களை பிறகு பார்க்கலாம்?

## முடியாது

ஒரு நாடு இன்னொரு நாட்டை அடக்கி வைக்க முடியாது. அடக்கினால் எரிமலை கக்கும்; மக்கள் மனமெனும் கடல் பொங்கி வழியும்; புரட்சிப் புயல் வீசும். அந்தப் புயலின் முன்பு எந்தக் கொடியவனும் நிற்க முடியாது.

## எப்படி முன்வருவர்

ஓநாய்க்கு இரத்த பானத்தில் சுவை இருக்கும் மட்டும் ஜீவகாருண்யத்தை இது எப்படி வரவேற்க முடியும்? அது போலவே தங்களுக்கு இலாபம் தரும் சாதனமாக இருக்கும் ஜாதியை ஒழிக்க எப்படி முன்வருவர், அந்த இலாபத்தை அடைபவர்கள்?

## விழைகிறோம்

"கலையிலே தேர்ந்து. அதிலே ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு கம்பனின் இராமாயணமும், சேக்கிழாரின் பெரிய புராணமும் கலை என்று கருதும் அன்பர்கள் பெரியாரின் பேரால், ஒரு அண்ணாதுரையின் அனலால் அக்கலை அழிந்துபடும் என்று கருதுவரேல், அவ்வளவு சாமான்யமானது கலையாகாது, அத்தகைய கலை இருத்தலுமாகாது என்றுரைக்க ஆசைப்படுகிறேன். கலையைக் குலைக்கும் செயலல்ல எமது செயல் கலையிலே புரட்சி உண்டாக்க விழைகிறோம்— தக்க காரணங்களோடு!"

## தேவை

"நமக்குக் காமரசம் கலவாத, மதம் கலவாத, மதியை வளர்க்கும் இலக்கியங்கள் தேவை. காலத்துக்கும் கருத்துக்கும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தொடர்புள்ள ஏடுகள் தேவை.



"ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்ற மனப்பான்மை தேவை, அருளை மட்டும், கேட்கும் ஆண்டவன் தேவை. கோயில் குருக்கள், குடும்பம், கூத்தி, மானியம், அதிர்வெடி கேட்கும் ஆண்டவன் வேண்டாம், நமக்கு! கோயிலுக்கு வெளியே வறுமை, கொடுமை, இல்லாமை—கோயிலிலே மலை போன்ற செல்வம் என்றிருக்கும் நிலையற்ற நிலைமை வேண்டாம்."

## பாமரனும் முதலாளியும்

"பணக்காரன் குளம் குட்டைகளுக்குச் சமமானவன்' முதலாளி ஊற்றுக்குச் சமமானவன். மழை பெய்தால் தான் குளம் குட்டைகளில் நீர் இருக்கும்; இன்றேல் வறண்டு விடும். ஆனால், ஊற்றோ என்றும் நீர் சுரந்து கொண்டே இருக்கும். இத்தகைய பேதம் இருக்கிறது. பணக்கரனுக்கும்—முதலாளிக்கும்."

## ஆற்றவேண்டியவை

"மேட்டினைப் பூந்தோட்டமாக்கவிதை கொண்டு வந்த வேளையில், பாம்பொன்றினால் இறந்த தோட்டக்காரனைக் கண்டு புலம்புவதும், பாம்பை அடித்துக் கொள்வதும் மட்டுமல்ல குடும்பத்தாரின் கடமை, இறந்து கிடப்பவரின்கரத்திலே உள்ளவிதையை எடுத்துப் பார்த்து விம்மி விம்மி அழுதான் பிறகு இவைகளைத் தூவி இங்கு பூந்தோட்டம் காணவிரும்பினார். அவர் மறைந்தார் விதையோ இருக்கிறது, இதோ தூவுவேன், பூந்தோட்டம் காண்பேன், அந்த மணத்திலே அவர் பெருமை கண்டு மகிழ்வேன். அவர் செய்து வந்த பணியை, நான் மேற்கொள்வேன் என்று கூறி அதை நடைமுறையில் ஆற்றலேயாகும்."

## மாற்றாது

"ரங்கனே, 'வெற்றிலைக் கடையை நடத்தினால் அதனாலே என்ன பயன்? நான் கம்பெனியில் உழைத்தேன். அதனால் அங்கு உயர்ந்தேன், கம்பெனி முதலாளியிடம் மரியாதையும், அன்பும்காட்டினேன், அதனால் அவர் என்னை ஆதரித்தார்—பாராட்டினார். இப்போது. அதே முறையில் நடந்து கொள்கிறேன் இங்கு—அதனால், கடைவீதியில், நாலுபேர் என்னை நல்லவன் என்றுதான் சொல்லுகிறார்கள்; இங்கு இருக்கவேண்டிய முறைப்படி, வெற்றிலை வாடாதபடி பார்த்துக்கொள்கிறேன், பாக்குக் கெடாதபடி பார்த்துக்கொள்கிறேன். சோடா கேட்டால், ஐஸ் கலந்து தரட்டுமா என்று கேட்கிறேன்—கடையைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்துக் கொள்கிறேன்—இதிலே புதிய சிரமமோ கவலையோ காணோமே! பாகவதராக இருந்தாலும் இல்லாவிட்டாலும், கடை நடத்தினாலும், நாடகமாடினாலும், எந்தக் காரியத்தைச் செய்தாலும், நல்லவனுக்கு, திறமைசாலிக்கு, உண்மை உழைப்பாளிக்கு, அவன் எந்த வேலையைச் செய்தாலும், அதிலே அவன் குறிப்பிடத்தக்கவனாவான்—இது இயற்கை நீதி! இதை, பொறாமை, பொச்சரிப்பு கலகம் எதுவும் மாற்றாது!

## கொண்டு வர முடியும்

சொந்த நாட்டிலே சோற்றுக்கு வகையின்றி, தங்க ஓடு போட்ட திருமண்டபத்தில் திரு நடனம் புரியும் தில்லையானும், வைரக்கற்கள் இழைத்த விமானத்தில் படுத்துறங்கும் அரங்கநாதனும், வைர நாமத்தைச் சூட்டிக்கொண்டிருக்கும் வரதனும், வெள்ளி ரிஷபமேறும் சிவனும், தங்கமயில் முருகனும் தங்கியிருக்கும் தாய் நாட்டில் தாங்கள் வாழ்வதற்கு வழியின்றி, வெளிநாடு செல்லும் அந்தப் பரிதாபத்திற்கு



ரிய தமிழர், கப்பல் தட்டில் நிற்கையில் இந்த நாட்டை வாழ்த்தியிருப்பார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா? கண்ணீரைக் கடல் நீரில் கலக்கிய அந்தக் கதியற்றவர்கள் 'அஷ்ட ஐஸ்வரியங்கள் உன்னிடத்தில் இருந்து என்ன? நாங்கள் அனாதைகள் தானே? வற்றாத நதிகள் இங்கே பாய்ந்து என்ன? எங்கள் வாழ்க்கை பாலைவனம்தானே! நஞ்சையும் புஞ்சையும் இருந்தென்ன? நாங்கள் பஞ்சைகள் தானே? நாங்கள் வாழ வழி செய்யாமல் வெளிநாட்டிற்கு எங்களைப் போகச் செய்யும் தமிழ்நாடே! சோறில்லை சொர்ணம் விளையும் இந்த நாட்டில், எங்களை இக்கதியில் விடும் நீ இருந்தென்ன? போயென்ன? அக்ரமத்திற்கு இடமளித்து அனாதைகளைத் துரத்தும் நீ அழிந்துபடு! அழிந்துபடு!!' என்று சபிக்காமலிருப்பாரா? வெளி நாட்டிற்குக் கூலியாகச் செல்லும் இழிநிலை, பாடுபட்டும் பசியாற உணவின்றித் திகைக்கும் தேய்நிலை நீங்க வேண்டாமா? வர்ணாசிரம தர்மம் என்ற வகையற்றவர் பேசும் ஏற்பாடு வேறொன்றுமில்லை. சூது நிறைந்த ஓர் சுரண்டல் இயந்திரம் தான்! அதை முறியடித்தால் பாடுபடுபவன் பதைக்க வேண்டியதில்லை; உழைப்பு வீணாகாது: உலுத்தர் உயர மாட்டார். சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி என்ற தத்துவத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியும்.

## எண்ணிப் பாருங்கள்

ரூப்சந்துகளும், ஜீவன்லால்களும், ஷிவ்நாராயண்களும், மூல்சந்துகளும் சென்னையில் முகாம் அமைத்துக்கொண்டு. நிலக்கடலை முதற்கொண்டு வைரம் வரை, சகலவிதமான பொருள்களையும், ஏற்றுமதியோ இறக்குமதியோ செய்யும் வசதி பெற்றிருப்பது போல, இங்குள்ள தனபாலர். அண்ணாமலை, ஆறு

மூகம் முதலியோருக்கேனும், வட நாட்டிலே, இடம் இருக்கிறதா என்பதை எண்ணிப்பாருங்கள்.

## இன்று எங்கே

சேரனுடைய கொலுமண்டபத்திலே கொண்டாட்டங்களின் போது இசைவாணர்கள், "வாதாபி கணபதே" பாடவில்லை

சோழன் களிக்க, "சுனோ சுனோ" பாடவில்லை. பாண்டியன் பரிபாலனத்தின்போது "பலுகவே ஏமீனா" என்று பாடவில்லை.

மூவரசர்கள் வாழ்ந்த நாட்களிலும், அதற்கு முன்பும், தியாகய்யர், சாஸ்திரி, தீட்சதர் கிருதிகள் பாடவில்லை இசையே இல்லையோ!

உண்டு! தமிழ் இசை பாடப்பட்டது. அந்த இசை இன்று எங்கே?

## சிங்காதனம்

சிங்காதனம் என்பது ஒருபாம்புப் புற்று. அதன் மீது அமர்வோரை அன்னார் ஏமாந்த நேரத்தில் புற்றிலிருந்து கிளம்பும் பாம்பு பொல்லாத பற்களால் கடித்துக் கொல்லும். கொல்லாமல் எப்படி இருக்கும் சிம்மாசனம் ஏறியவர்களை ஏமாந்த நேரத்தில் ஓங்கிய வாளுடன் துரத்தியடிக்கும் நிகழ்ச்சிகளைத்தானே பெரும்பாலும் சரித்திரம் பேசுகிறது?

## விஞ்ஞானம்

விஞ்ஞானம் குழைத்துக் கரைக்கப்பட்ட வண்ணச் சுண்ணம். அதனைக்கொண்டு அழகான பெண்ணின் உருவையும் தீட்டலாம் கோரமான குரங்கின் உருவையும் எழுதலாம். குரங்கு எழுதப்பட்டால் குற்றம் கலர் கிண்ணத்தின் மீதா? எழுதும் ஓவியன் மீதா?



## நம்மால் முடியாதா?

அலை கடல் அடக்கும் மரக்கலம் அமைத்தோர், விண்ணில் பறக்கும் விமானம் அமைத்தோர், தொலைவிலுள்ளதைக் கேட்கவும் காணவும் கருவிகள் கண்டுபிடித்தோர், காட்டாறுகளைக் கட்டுக்குக் கொண்டுவந்தோர், நீரிலே நெருப்பின் சக்தியைக் கண்டறிந்தோர் அனைவரும் நம்மைப் போல் மனிதரே. அவர்களால் முடிந்தது, நம்மால் முடியாதா?

## தென்னாடு

சந்திரகுப்தன் காலடி, கனிஷ்கரின் முரசு, அக்பரின் செங்கோல் எதுவும் படாத நாடல்லவா தென்னாடு? அத்தகு நாடு இன்று டாடாவும், பிர்லாவும் மார்வாடிகளும் உலவும், வேட்டைக்காடாக ஆகிவிட்டதே?

## முடிவு

உரத்த குரலோன் காட்டிய வழி நடந்தோம், அரசியலில்! கபடன் காட்டிய வழி நடந்தோம் சமூகத் துறையில்! பூசாரி காட்டிய வழி சென்றோம். அருள் பெறும் நெறியில்! எத்தன் காட்டிய வழி நடந்தோம், பொருளாதாரத் துறையில்! முடிவு? வாழ வழி யற்றது தான்.

## அரசியல் கட்சி

"அரசியல் கட்சிகள் என்ற எண்ணம் ஏற்பட்டதே நல்லவர்கள் அரசியலில் ஈடுபடமுடியும்; அரசியலை நல்லதாக ஆக்க முடியும் என்ற நம்பிக்கை வந்த பிறகு தான்.

"அரசியல் கட்சிகள் ஏற்படுத்தலாம் என்ற எண்ணம் ஏற்பட்டதற்கு முக்கிய காரணம், மக்களே அரசியலை நடத்த ஆரம்பித்ததால்தான் உண்மையில் அவர்களது வாழ்வு துவங்கும் என்று கருதியதால்தான்!

## கங்கிரஸ்சில் கூட

"காங்கிரசிற்கூட இன்றைய தினம் சில குறிப்பிட்டுள்ள தலைவர்கள், 'காங்கிரசு என்பது ஒரு கட்சியாகிவிட்ட காரணத்தாலேதான், பல கேடுபாடுகள் வந்து புகுந்துவிட்டன; அது ஒரு தேசிய இயக்கமாக இருந்த வரையில் தேசியக் கிளர்ச்சி ஸ்தாபனமாக இருந்த வரையில் ஒன்றும் இல்லை; அதில் ஏதாவது சில குறைபாடுகள் வந்து புகுந்து விட்டன என்றால், அது அரசியல் கட்சியான பிறகுதான்' என்று எண்ணிப் பார்க்கிறார்கள்; சில வேளைகளில் சொல்லவும் செய்கிறார்கள்.

## கண்டு பிடிக்க முடியாது

"அரசியல் என்பது—நாட்டில் ஆட்சி செய்வதற்கு மட்டும் என்று அமைக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகள் பலநாடு களில் இருக்கின்றன; அமெரிக்காவிலுள்ள அரசியல் கட்சிகள் வெறும் அரசியல் கட்சிகள்தான்; ஒரு அரசியல் கட்சிக்கும் மற்றொரு அரசியல் கட்சிக்கும் உள்ள வித்தியாசத்தைச் சுலபத்தில் நம்மால் கண்டுபிடிக்க முடியாது. என்னையே நீங்கள் 'ஐசனோவர் கட்சிக்கும் அவருடைய எதிர்கட்சிக்கும் அடிப்படையில் என்ன வித்தியாசம்?—என்று கேட்டால், என்னாலேயே சொல்ல முடியாது, என்றுதான் சொல்ல வேண்டும். என்னாலேயே என்றால், 'உங்களால் சொல்ல முடியாது, அதில் தொத்தி நிற்கிறது; ஏனென்றால் இருந்து பார்க்கவேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது.



## ஒன்றாக இருக்கின்றன

'திராவிட நாடு' என்று நாம் சொன்னால் அப்படிப்பட்ட நாடு எங்கே இருக்கிறது? என்று கேட்பதற்கு ஒரு கட்சி இங்கே இருக்கிறது. அதைப்போல் அவர்கள் 'இந்தியா, என்றால் அது எங்கே இருக்கிறது என்று நாம் கேட்கிறோம்! மாங்காய்க்கு புளி எதிலும் குறையவில்லை. போட்டித்தான் என்பதைப்போல், ஒரு கட்சிக்கு மறு கட்சி போட்டியில் குறைவு இல்லை. ஒருகட்சி மற்றொரு கட்சியை அடித்துப் பேசுவதில் எல்லாம் ஒன்றாகவே இருக்கின்றன.

## ஒத்துழைப்பு என்றால் என்ன?

"இப்போது ஒருகட்சிக்கும் மற்றொரு கட்சிக்கும் குறிப்பிடத் தக்க—ஒரு அரசியல் கட்சி மற்றொரு அரசியல் கட்சியைப் பார்த்த உடனே அச்சப்படத்தக்க அடிப்படை வேறுபாடுகள் இருக்கதான் செய்யும். அதைப்போல, இப்பொழுது எடுத்துக் கொள்ள படும் எந்த பிரச்சினைகளானாலும், இப்பொழுது உள்ள கட்சிகளில் காங்கிரசுக்கட்சிக்கும், தி. மு. கழகத்துக்கும் அடிப்படைக் கருத்திலே எவ்வளவு வேறுபாடுகள் இருக்கின்றன என்றுபாருங்கள்—ஐந்தாண்டுத் திட்டம் வேண்டுமா? காங்கிரசுக்காரர்கள் கேட்டால், வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம். அப்படியானால் ஐந்தாண்டுத் திட்டத்தை அமுலாக்குவதிலே நீங்கள் ஏன் ஒத்துழைக்கக் கூடாது? என்று கேட்டால் ஒத்துழைக்கிறோம் என்று நாம் சொல்லுகிறோம். சொல்லிவிட்டு நாம், ஐந்தாண்டுத் திட்டத்தில் நாங்கள் ஒத்துழைப்பது என்பது எந்தக் கட்டத்தில்? என்று கேட்கிறோம். இதைத்தான் நான் சட்டமன்றத்தில் கூடக் கேட்டேன்."

ஒத்துழைக்கச் சொல்லி கூப்பிடுகிறீர்கள் ஒத்துழைக்கக் கூப்பிடுவதில் இரண்டு மூன்று வகை

உண்டு; சினிமா கொட்டகைக்குப் போகும் உங்களுக்கு நான் ஒரு உதாரணம் சொல்லுவேன்—இரண்டு பேர், அவர்கள் பணம் கொடுத்து டிக்கெட் வாங்கி உள்ளேபோய் உட்காருகிறார்கள்; படம் ஆரம்பிப்பதற்கு முன்னாலே ஒருவருக்கு வெளியேபோய் வர வேண்டும் என்று எண்ணம் வருகிறது; அப்பொழுது அவர் தன் கைக்குட்டையை, தான் உட்கார்ந்திருந்த இடத்தில் போட்டு விட்டு அடுத்தவரிடம், இதைக் கொஞ்சம் பார்த்துக்கொள்ளுங்கள்; வெளியில் போய் விட்டு வருகிறேன் என்று சொல்லுவார்—இது ஒரு வகையான ஒத்துழைப்பு! உள்ளே நுழைகின்ற போதே, மற்றவர் டிக்கட்டை நான் வாங்கிக் கொண்டு, நாம் இருவரும் ஒற்றுமையாகப் போகலாம்; நீங்கள் வெளியில் கொஞ்சம் இருங்கள்; இரண்டு டிக்கெட்டையும் வைத்துக்கொண்டு நானே உள்ளே போகிறேன் என்று சொன்னால், அது ஒத்துழைப்பு ஆகாது."

ஒத்துழைப்பு என்பது, அவரவர்கள் முயற்சியில் ஈடுபடும் போதே ஒத்துழைப்பு இருக்க வேண்டும்; திட்டங்கள் தீட்டப்படுகின்ற நேரத்திலேயே, ஒரு குறிப்பிட்ட பகுதிக்கும்—ஒருகுறிப்பிட்ட மக்களுக்கும் எனத் திட்டங்களை தீட்டிவிட்டு, எங்களை ஒத்துழைக்க வாரீர் என்றால் அதில் பயன் இல்லை என்று, தி. மு. கழகம் சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லிற்று. திட்டங்களை போடும்போது எந்த அரசியல் கட்சிகளையாவது காங்கிரசுக் கட்சி அழைத்ததா என்றால், எந்தக் கட்சிகளையும் அழைக்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி தன் கருத்தைச் சொல்ல அனுமதிக்கப் படவில்லை; சோசலிஸ்ட் கட்சியைக் கேட்டுத் திட்டங்கள் தீட்டப்படவில்லை; தி. மு. கழகம் அப்போது கருத்துக்களைச் சொல்லும் நிலையே பெறவில்லை எந்த அரசியல் கட்சியையும் அழைத்துக் கேட்டுத்



திட்டங்கள் போடாமல்-காங்கிரசு அமைச்சர்கள் கூட ஒன்றாகச் சேர்ந்து திட்டங்கள் போடாமல் அவர்களுக்கு எல்லாம் மேலாக ஒரு குழுவை (Planning Commissinon) நியமித்து, அக் குழுவில் நீண்டகால வெள்ளைக்கார ஏகாதிபத்திய நிர்வாகத்துடன் பழகிப்பழகி, ஒரு குறிப்பிட்ட மனப்பான்மையில் ஊறிப் போன பெரிய மனிதர்களை உட்கார வைத்துத் திட்டங்களைப்போட்டு திட்டத்தில் இன்ன இடத்தில் பாலம் கட்டவேண்டும்—இந்த இடத்தில் எஞ்சின் கட்டவேண்டும்— இந்த இடத்தில் பெட்டி கட்ட வேண்டும் இந்த இடத்தில் அணை கட்டவேண்டும் என்று இவர்களே வகுத்துக்கொண்டு, அதன் பிறகு பணம் திரட்டிச் செலவழிக்கும்போது, எங்களைப் பார்த்து, 'திட்டங்களில் ஒத்துழையுங்கள், என்று கேட்கிறார்கள்.

"திட்டங்கள் நிறைவேறுவதற்கு அரசியல் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும். என்றால் திட்டங்களைத் தீட்டுகின்றபோது அந்த எண்ணம் இருந்தால்தான், திட்டம் வெற்றி பெற முடியும்."

## ஐந்தாண்டு திட்டத்தை எதிர்க்கவில்லை

"அரசியல் கட்சிகளைக் கலக்காமல் திட்டங்கள் போடுவதனால் அடிப்படையிலேயே திட்டங்களில் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. பொதுவாக மக்கள் என்ன கருதுகிறார்கள்? 'காங்கிரசுக்கட்சி திட்டங்களை போடுகின்ற கட்சி; தி. மு. கழகம் அந்த திட்டங்களை எதிர்க்கின்ற கட்சி, என்று கருதுகிறார்கள்.

"ஆனால் உண்மையில் தி. மு. கழகம் ஐந்தாண்டுத் திட்டத்தை எதிர்க்கவில்லை; திட்டங்களை ஒருதலைப்பட்சமாக ஒரு அரசியல் தீட்டியுள்ளதை எதிர்க்கின்ற கட்சி என்றுதான் அதனைப் பார்க்கவேண்டும்.

அந்த அளவில் பார்க்கும்போது, தி. மு. கழகமானாலும், அல்லது மற்றக் கட்சியாயிருந்தாலும், அரசியல் கட்சி என்று நிலையைப் பெறுவதற்கு முன்னால், அதனுடைய கொள்கை இலட்சியங்களில் வெற்றி கிடைக்கவேண்டும். அதனால்—தான் தி. மு. கழகம் வெறும் அரசியல் கட்சி செய்யவேண்டிய வேலையை மட்டும் செய்யாமல், ஒரு தேசீய விடுதலை இயக்கம் செய்கின்ற அந்தக் காரியத்தையும் செய்கிறது"

## இல்லை

"அதே போன்று, காங்கிரசுக் கட்சி ஒரு அரசியல் கட்சியாக மட்டும் இருக்கின்றதா என்றால், இல்லை! இன்றைய தினம் காங்கிரசுக் கட்சியைப் பார்க்கின்ற உண்மையான காங்கிரசுக்காரர்கள், அது ஒரு நல்ல அரசியல் கட்சி என்று ஒத்துக்கொள்ளமாட்டார்கள்; ஆனால், அது ஒரு செல்வாக்கான அரசியல் கட்சியாக இருக்கிறது—அதை யாரும் மறுக்கவில்லை! மக்களிடத்திலே ஓட்டு வாங்குவதிலே திறமை பெற்றிருக்கிறது. நாட்டை ஆளும் கட்சியாக இருக்கிறது—அது நமக்கு நன்றாகத் தெரிந்து இருக்கிறது! ஆனால் அரசியல், கட்சிக்கேற்ற இலட்சணங்கள் காங்கிரசுக் கட்சிக்கு இருக்கின்றதா என்றால் இல்லை"

## என்ன அர்த்தம்?

அரசியல் கட்சி என்பது ஒரு சில குறிப்பிட்ட இலட்சணங்கள் மீது கட்டப்பட்டிருக்க வேண்டும். சிவன் கோயில் என்றால்—அங்கு இருக்கின்ற வாகனத்திலிருந்து அங்கே பூசை செய்கின்ற குருக்கள் வரையில், விபூதி அணிந்திருப்பார்கள். விஷ்ணு கோயில் என்றால்—அங்கே இருக்கிற யானையிலே இருந்து ஐயர் வரையிலே நாமம் போட்டிருப்பார்கள். சிவனுக்கும்—விஷ்ணுக்கும் சண்டையில்லை; அதனால் விபூதி அணிந்தவர்கள் விஷ்ணு கோயிலுக்கும் போகலாம்; நாமம் போட்டவர்கள் சிவன் கோயிலுக்குப் போகலாம்' என்று மேடையில் பேசலாம்; ஆனால் சிவன் கோயிலுக்குப் போனால் நிச்சயம் விபூதிதான் பார்க்கலாம்; விஷ்ணுகோயிலுக்குப் போனால் நாமம் தான் பார்க்கலாம்.



"எல்லோரையும் ஒன்றாகப் பார்க்கின்ற ஆண்டவன் சன்னிதானத்திலே சில சின்னங்கள் சில குறிப்பிட்ட கோயில்களுக்குச் சொந்தமென்றால், அரசியல் கட்சிகள் என்று வருகிறபோது, சில குறிப்பிட்ட கருத்துக்களை ஏற்றுக்கொண்டவர்களை மட்டும்தான் கட்சிகள் சேர்த்துக்கொள்ள வேண்டும்."

தி. மு. கழகம் என்று வருகிறபோது, 'திராவிட நாடு தனி நாடாகப் பிரியவேண்டும்' என்ற கருத்து இருக்கிறது. திராவிட நாடு தனி நாடாகப் பிரியக் கூடாதென்று சொல்லுகிற டாடா கம்பெனியைச் சேர்ந்த ஒருவர், தி. மு. கழகத்திற்குச் செயலாளராக வரவேண்டும் என்றால் என்ன அர்த்தம்? கட்சியைக் குத்தகைக்கு விடுகிறோம் என்று அர்த்தம்—டாடா கம்பெனி நம் கட்சியை விலை கொடுத்து வாங்கி விட்டது என்று பொருள்!

## இருக்கிறதா?

காங்கிரசிக் கட்சிக்கென்று காந்தியார் காலம் முதற்கொண்டு ஜவஹர்லால் நேரு அவர்கள் மிகுந்த தீவிர வாதியாக இருந்த காலம் வரையிலே, சில கருத்துக்கள் இருந்திருக்கின்றன. அந்தக் கருத்துக்களை, இன்றைய தினம் இருக்கின்ற காங்கிரசுக் கட்சியிலே ஈடுபாடு கொண்டுள்ளவர்களிடம் காண முடிகிறதா என்று நான் காங்கிரசு நண்பர்களைக் கேட்க விரும்புகிறேன்.

## அரசியல் கட்சியா?

உங்களுக்கு சந்தேகம் இருக்குமானால், காங்கிரசிலே உழைத்து உண்மையான தொண்டர்களாக இருந்து—காங்கிரசுக் கட்சியிலே சலிப்பு கொஞ்சம் ஏற்படாமல் இருந்தால்—தயவுசெய்து சட்ட மன்றத்திற்கு வாருங்கள் அங்கே காங்கிரசுக் கட்சியிலே உட்கார்ந்திருப்பவர்களை எல்லாம் பாருங்கள். எத்தனை பேருடைய முகம் உங்கள் கவனத்தில் இருக்கிறது? உண்மையான காங்கிரசுத் தோழர்கள் இங்கே செல்லாராம் கடைசியிலும், வெளிநாட்டுத் துணிக்கடையிலும் மறியல் செய்து தடியடிபட்ட காலத்தில், காங்கிரசுக் கட்சி அவையிலே உட்கார்ந்து இருக்கிற பல பேர்—இராசா சர். முத்தைய்யா செட்டியார், அமைச்சர் மாணிக்கவேலர், அமைச்சராக இருந்து இன்றைய தினம் அமைச்சராக இல்லையே என்று ஆயாசப்படும் இராமசாமிப் படையாட்சி அவர்கள், அப்துல் ரஷீத் என்ற நண்பர். ஹாஜா ஷெரீப் என்ற நண்பர்—இவர்களில் யாரை வேண்டுமானாலும் பாருங்கள்; அல்லது தி. மு. கழகத்தை எதிர்ப்பதற்குத் தயாரித்திருக்கின்ற பேச்சாளர்களையும் பாருங்கள்; நம்முடைய உழுவல்—நண்பர் தமிழர்கள் எல்லைக்காக மிகத் தொல்லைப்பட்டவர்—இப்பொழுது காங்கிரசுக் கட்சியிலே யிருக்கிறாரே விநயகம்—அவரையும் பாருங்கள்; அவர்களுக்கும் காங்கிரசுக் கட்சி சொல்லிக்கொண்டிருக்கும் இலக்கணத்திற்கும் என்ன பொருந்தும்? அரசியல் இலட்சணம் பொருந்தவில்லை என்றால் எப்படிக்காங்கிரசு கட்சியை அரசியல் கட்சி என்று சொல்லுவது?

## மூன்று வகையான கட்சியினர்

காங்கிரசுக் கட்சியில் இன்றைய தினம் மூன்று வகையானவர்கள் இருக்கிறார்கள்; சாதாரணமாக



சில்லறைக் கடையிலுள்ள கல்லா (பணப்)பெட்டியைப் பார்த்தால் தெரியும்; முதலில் திறந்தால் ஒரு அறை இருக்கும்; அதில் வெறும் சில்லறைகள் இருக்கும்—அதற்கு அடியிலே ஒரு அறை இருக்கும்-அதில் அணுக்கள் இருக்கும்; அதற்குக் கீழாக ஒரு அறை இருக்கும்—அதனுடைய சாவி அவரிடம் மட்டும் தான் இருக்கும்; அதில் கொஞ்சம் பணம் இருக்கும்—அதில்தான் நோட்டுகள் எல்லாம் இருக்கும்; அதைப் போல காங்கிரசில் இன்றைய தினம் மூன்றுவிதமான "நாணயங்கள் இருக்கின்றன, ஒன்று—காங்கிரசுக் கட்சியில் இருக்கின்ற முக்கியமானவர்கள்; இரண்டு—சுயராஜ்யம் கிடைத்த பிறகு நாட்டுப்பற்றுக் கொண்டவர்கள்; மூன்றாவதாக உள்ளவர்கள்—உண்மையாகக் காங்கிரசில் உழைத்து, இன்றையதினம் அவர்கள் கருத்து மேவாத நிலை அடைந்திருப்பவர்கள்; இப்படி மூன்று அங்கமாக காங்கிரசிக் கட்சி இன்றைய தினம் இருக்கிறது.

## இப்படித்தான் நடக்கும்

இராசா சர். முத்தைய்ய செட்டியார் பெரும் சொத்துக்கு அதிபர்; காமராசர், இந்தச் சொத்துக்களையெல்லாம் மக்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று வாக்குறுதி கொடுத்துவிட்டு, முடிசூட்டிக் கொண்டிருப்பவர்; இதற்காகத்தான் காந்தியார் இந்தக் காங்கிரசை ஏற்படுத்தினார்' என்பதை, இன்னமும் நம்பிக் கொண்டிருப்பவர் சர்தார் வேதரத்தினம்; இவர்கள் மூன்றுபேரும் ஒன்றாகச் சந்தித்தால் எப்படி இருக்கும்?

சுவர் ஏறிக் குதித்துச் சிறையிலிருந்து தப்பிஓடிய ஒரு கைதியும், சிறையிலடைப்பதற்குப் பிடித்துக் கொண்டு வரும்போது போலீஸ்காரரைக் தாக்கிவிட்டுத் தப்பி ஓடிய கைதியும், இந்த இரண்டு பேரையும்

கண்டுபிடிப்பதற்காக அனுப்பப்பட்ட ஒரு போலீஸ்காரரும் ஒருநாள் இரவு சத்திரத்தில் படுத்துத் தூங்கினால் எப்படி இருக்கும்? கைதிக்கு—போலீஸ்காரன் என்று தெரியாமல் இருக்கலாம்; போலீஸ்காரனுக்கு கைதி என்று தெரியாத காரணத்தால் அவர் பீடியை எடுத்துக்கொடுத்தால் இவன் நெருப்புப் பெட்டியை கொடுக்கலாம்; வெற்றிலை தேவை என்றால் கொடுக்கலாம் ஆனால் பொழுதுவிடிந்தால் போலீஸ்காரர் ‘டேய் பயலே, நீ வேலூரிலிருந்து தப்பி ஓடிவந்தவன் அல்லவா? என்று கைதியின் கையைப் பிடிப்பார்: அவன் ஓங்கி அடிப்பான்; பிறகு இரண்டுபேரும் ஓட ஆரம்பிப்பார்கள்;

“இது இன்னும் ஐந்து வருடத்திற்குள் ஏற்படும் என்று எண்ணுகிறேன். அதுவரையில் அந்த மூன்று பேரும் ஒன்றாக இருப்பது போல்தான் தோன்றும்; ஆனால் உண்மை அதுவல்ல!! இது காங்கிரசுக்கட்சிக்கு மட்டுமல்ல—எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும், தேவையானது ஒன்றுதான் கடையிலே தங்குமே தவிர, வேறு எதுவும் நிற்காது!

தேங்காயை மரத்திலிருந்து மிக ஜாக்கிரதையாகத்தான் பறித்துக்கொண்டு வருகிறோம்; பிறகு அதை வெட்டி எடுக்கும்போது மட்டையை எங்கே போடுகிறோம்? குப்பையில் போடுகிறோம்—‘உலர்ந்தால் அடுப்புக்கு வைக்கலாம்’ என்று! அதன் பிறகு தேங்காயை உடைத்து அதனுள்ளிருக்கும் வெள்ளையான பகுதியை மட்டும்தான் உபயோகப்படுத்துகிறோமே தவிர, ஓட்டை என்ன செய்கிறோம்? குப்பையில் போடுகிறோம்; ஆனால், தேங்காய் என்றால் இந்த மூன்றும் ஆக்கப்பட்ட பகுதிதான்!’

உபயோகமான பகுதி எது என்று மக்களுக்குத் தெரிகிறதோ அதைமட்டும் வைத்துக்கொண்டு, மற்றவற்றைத் தூக்கி வெளியே போட்டு விடுவார்கள்;



இன்னும் போடவில்லை—போடத்தான் போகிறார்கள்! போடுகின்ற காலம் வரும்போதுதான் அரசியல் கட்சி என்ற தத்துவம்கூட காங்கிரசுக் கட்சிக்கு வரும்,

## நமது கட்சி

நம்முடைய கழகத்தில் அப்படி நீங்கள் பார்க்க முடியாது. நம்முடைய கழகத்தில் தேங்காய்—இளநீர் என்கின்ற வித்தியாசம் மட்டும் வேண்டுமானால் இருக்கலாம். சிலர்—அனுபவத்தாலேயும் அதிக நாள் கட்சியில் இருந்ததாலேயும் நெருங்கி இருப்பதாலும் தேங்காயாக இருக்கலாம்; சிலர் சேர்ந்து சிறிது காலமேயான காரணத்தினாலே இளநீர்போல வழவழப்பாக இருக்கலாம்—இளநீர் வழவழப்பாக இருக்கும் என்று நான் சொல்லுகின்றபோது அதில்தான் சுவையும் இருக்கும் என்பதையும்—மறந்துவிடக் கூடாது; இது சிலவற்றிற்குத் தேவைப்படும்—அது பலவற்றிற்குப் பயன்படும் அதனால் இது தேவை—அது தேவையில்லை’ என்று சொல்லக்கூடாது. ஆனால் வழுக்கை தேங்காயாக மாறலாமே தவிர, தேங்காய் வழுக்கையாக மாறாது!

## நமது கருத்து

திராவிட நாட்டை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள்—திராவிட நாட்டில் முதலாளித்துவம்கூடாது என்கிற கருத்து கொண்டவர்கள்—திராவிட நாட்டில் ஏழை—எளியவர் என்று இருப்பவர்களை ஈடேற்றுவதற்கு திட்டங்கள் இருக்க வேண்டும் என்று உறுதியாக எண்ணுகின்றவர்கள்—திராவிடத்திலே ஜாதி, மதம் நீக்கப்பட வேண்டுமென்று நம்புபவர்கள்—மாறாத கொள்கை உறுதி படைத்தவர்கள்—ஆகிய இப்படிப்பட்டவர்கள் மட்டுமே நமது கழகத்தில் இருக்கவேண்டும் என்று கருதுகிறோம்;

## வேடிக்கை

இப்பொழுது காங்கிரசுக் கட்சிக்குள்ளே அஜீரணப்படத்தக்க சில பொருள்கள் உள்ளே போய் விட்டபடியால், ஜீரணப்படுத்துவதற்கு 'இஞ்சிக் கட்சி' என்று ஒன்றை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், காங்கிரசில் முக்கியமான தலைவர் பண்டித ஜவகர்லால்நேரு! இந்த 'இஞ்சிக் கட்சி'யில் தலைவராக இருப்பது பண்டித நேருவின் திருக்குமாரி இந்திரா—நேரு! இது எவ்வளவு விசித்திரமாக இருக்கிறது என்று பாருங்கள்! அல்லது, அரசியல் எவ்வளவு கேலிக்கூத்தாக ஆகி விட்டது என்று பாருங்கள்!

தந்தை நடத்துகின்ற கட்சியில் ஏற்படுகின்ற அஜீரணத்தைப் போக்க மகள் தயாரிக்கின்ற இஞ்சி மொரப்பான் தேவைப்படுகிறது; காரணம் என்ன? தந்தை தவறான பாதையில் போகிறார் என்பதை ஒரு கட்சியை ஆரம்பிக்காமலேயே மகள் சொல்லக் கூடாதா? அப்படி இல்லையே! 'நேரு போகின்ற பாதையே சரி; தவறொன்றும் இல்லை' என்று, தானே மகளைக் கூப்பிட்டு, 'என்ன, குற்றம் கண்டுவிட்டாய் காங்கிரசு ஆட்சியில்? அப்படியிருந்தால் சொல்லக் கூடாதா? திருத்திக்கொள்ள மாட்டோமா? ஏன் அதற்கு ஒரு தனிக்கட்சி ஆரம்பிக்க வேண்டும்?' என்று நேரு கேட்டு இருக்கமாட்டாரா? மகளுக்கும் தந்தைக்கும் என்ன—உறவு இல்லாமல் இருக்கிறதா? இருந்தால் கூட அந்த அம்மையார் ஒரு கட்சி ஆரம்பிக்கிறார் என்றால், என்ன பொருள் அதற்கு?

## அரசியல் சூட்சமம்

முன்பு நடந்த முந்திரா விவகாரத்தை ஆராய்ந்து பார்த்தால் தெரியும். முந்திராவுக்குப் பணம் தரச்



சொன்ன கட்சி காங்கிரசுக் கட்சி; அதற்கு தலைவர் பண்டித ஜவகர்லால்நேரு; முந்திராவுக்குப் பணம் கொடுத்தது தவறு என்று கண்டுபிடித்தவர் பிரோஸ் காந்தி—அவர் இருக்கிற கட்சியும் காங்கிரசுக் கட்சி—அவர் யாரென்றால், நேருவுக்கு மருமகப்பிள்ளை!

மாமனார் நடத்தும் தர்பாரில் கண்மூடித்தனமாக பணத்தை செலவு செய்கிறார் என்று மருமகப் பிள்ளை தான் கண்டு பிடித்துச் சொல்லவேண்டி யிருக்கிறது. மாமனாருக்கும் — மருமகப்பிள்ளைக்கும், பணம் எப்படித் தருகிறார்கள்?' என்பதிலே தகராறு இருக்கிறது! தந்தைக்கும்—மகளுக்கும், 'கட்சியை எப்படி நடத்துகிறார்கள்? என்பதிலே தகராறு இருக் கிறது!

இத்தனைப் பேரும் சேர்ந்ததுதான் காங்கிரசுக் கட்சி! எத்தனை நாட்களுக்கு இந்த ஒட்டு உறவு இருக் கும்? மாமனார்—மருமகன் உறவு இருக்கலாம்; கண வன்—மனைவி உறவு இருக்கலாம்; ஆனால், இவர்கள் அத்தனைப் பேரும் சேர்ந்ததுதான் காங்கிரசுக் கட்சி என்று இருக்கிற இலக்கணம் எத்தனை நாட்களுக்கு நிலைக்கும்? ஆனால், இது அவர்களுக்குத் தெரிகிறதா? அப்படியானால், ஏன் 'இஞ்சிக்கட்சி' ஆரம்பிக் கிறார்கள் என்றால், அதில்தான் அரசியல் சூட்சமம் இருக்கிறது.

## காங்கிரசு எம். எல்.ஏ.

காங்கிரசு, எம்.எல்.ஏக்கள் பேசுகின்றபோது எப்படி ஆரம்பிக்கிறார்கள் என்றால்—காங்கிரசு மந்திரி களுக்குத் திருப்தி உண்டாகவேண்டும் என்பதற்கு எதிர் தரப்பில் இருக்கும் தி. மு. கழகத்தவர்கள் எதற் கெடுத்தாலும் காங்கிரசுக் கட்சியைக் குறைசொல்லு கிறார்கள்; இது தவறு—இதைக் கண்டிக்கிறோம்—இதை நாங்கள அனுமதிக்க முடியாது!—என்று,

இப்படிக் கூறி மந்திரிகளைத் திருப்தி செய்தான பிறகு 'ஆனால்' என்று சுருதி இறங்கும்; நாங்கள் எங்கள் தொகுதியைப்பற்றி பத்து வருடங்களாக சொல்லிக் கொண்டுதானிருக்கிறோம்; எந்த மந்திரியும் கவனிக்கவில்லை பணத்தை ஒதுக்கிவிட்டோம்—ஒதுக்கிவிட்டோம் என்றுதான் சொல்லுகின்றார்களே தவிர அது எங்கள் பக்கமே வரவில்லை', எல்லா மந்திரிகளையும் தான் அழைத்துக்கொண்டுதான் போகிறோம்' என்று குறைபட்டுக் கொள்ளுவார்கள்.

## காங்கிரசார் பேச்சு

சட்ட மன்றத்தில் இன்றையத் தினம் நடவடிக்கைகளைப் பார்த்தால், பேசுவது ஆளுங்கட்சியா, அல்லது எதிர்கட்சியா என்பதைக்கூட ஆளைப்பார்த்துதான் தெரிந்து கொள்ள வேண்டும். காங்கிரசுக்காரர்கள் பேசும் போது முதலில் எங்களை கண்டித்துவிட்டு பிறகு மந்திரிகளின் அன்பைப் பெற்று. தங்களுடைய தொகுதிகளின் குறைபாடுகளைச் சொல்லி கடைசியில் முடிக்கின்றபோது மறுபடியும் நம்மிடம் வந்து விடுவார்கள்— இப்படியெல்லாம் இருக்கின்றபோது அணைக்கட்டாமல், பள்ளிக்கூடங்கள் கட்டாமல் பாலங்கள் கட்டாமல் இருக்கின்றபோது எதிர்க்கட்சிக்காரர்கள் காங்கிரசுக் கட்சியை எதிர்ப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்; ஆகையினாலே அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த மானியத்தை நான் முழுமனதோடு ஆதரிக்கிறேன்,—முடிந்தது!

ஆரம்பம் எதிர்க்கட்சிகளைத் திட்டுவது! இடையில் சொல்லுவது, இவர்கள் கண்ட குற்றம் குறைகள் அதை, ஏறக்குறைய 'திருப்புகழைப் படித்தால் இந்த இலக்கணம் எப்படி இருக்கிறது என்று தெரியும். ஒரு பாட்டில் 18 வரி அல்லது 20 வரிகள் இருந்தால் அதில்



16 வரிகள் சிற்றின்பரசம் பற்றி எவ்வளவு சொல்ல வேண்டுமோ அவ்வளவும் இருக்கும்; அதிலே, 'இப்படிப் பட்ட பெண்—அப்படிப்பட்ட பெண்: இவளிடம் இப்படியெல்லாம் சந்தோஷமாக இருக்கலாம்—அவளிடம் அப்படியெல்லாம் சந்தோஷமாக இருக்கலாம்; அதரம் இப்படி இருக்கும்—கண் அப்படி இருக்கும்'—என்று எல்லாம் வர்ணித்து விட்டு, கடைசியில் இப்படிப்பட்ட மையலில் என்னை சிக்கவைக்காமல் மால் மருகோனே, என்னைக் காப்பாற்று' என்று முடிந்திருக்கும்.

முதலில் சொன்ன அத்தனையும், மையல் இவர்களுக்கு எவ்வளவு இனிக்கிறது என்பதைக் காட்டும் கடைசியில், 'மால் மருகனே' என்று சொல்லும்போதுகூட, 'மால் மருகனே' என்னைக் காப்பாற்று' என்று சொல்லிமருகனே எப்படி மையலில் சிக்கினேன் என்பதைக்கவனப்படுத்தி 'முடிந்தால் என்னைக்காப்பாற்று' என்று முருகனுக்கே சவால் விடுவதுபோல் இருக்கும். இப்படித்தான் காங்கிரசுக்காரர்களின் பேச்சு அமைந்திருக்கிறது.

## எனது ஆசை

நம்முடைய கழகத்தில் கொள்கைப்பற்றும், நல்ல அறிவும், கொள்கையை அறிந்து கொள்ள வேண்டுமென்பதிலே நல்ல ஆர்வமும் வாலிபத் தோழர்கள் ஏராளமாக ஈடுபட வேண்டும். நமக்கு இன்றையதினம் ஏராளமான ஆதரவாளர்கள் இருக்கிறார்கள்' அவர்கள் தங்கள் தங்கள் இடங்களிலேயே இருந்துகொண்டு, தங்களால் இயன்றவரையில் தி. மு கழகத்திற்குப் பெற்று தரக்கூடிய வாய்ப்பை—வலிவை பெற்றுத் தரவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்

ஆகவே அரசியல் கட்சிகள், கூடா நட்பாக இல்லாமல்— ஒட்டாத உறவாக இல்லாமல், நம்முடைய

கழகத்தைப்போல் தெளிவான கொள்கை, விளங்கக் கூடிய திட்டம், வரலாற்று ஆதாரங்கள், காணக் கூடிய புள்ளி விவரங்கள் இவைகளைப் படைத்தவையாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நல்ல அரசியல் கட்சியில் நீங்களும் நானும் இருக்கிறோம் என்பதிலே பெருமைப்படுகிறோம், என்று கூறிக் கொள்கிறேன்.

## இந்திப்பிரச்னை

ஆச்சாரியார் சொல்லுகிறார் 'இந்த நாட்டிலே, இந்தியைப் பேசுகின்ற மக்கள் இந்திய துணைக்கண்ட முழுவதிலும் பரவலாக இல்லை'— என்று! இந்த வாதத்தை யாரும் மறுக்கவில்லை. 'ஒரு குறிப்பிட்ட பகுதியிலே தான் இந்தி பேசும் மக்கள் இருக்கிறார்கள் என்கிறார்; அதனையும் இல்லை என்று யாரும் சொல்லவில்லை. அப்படிப்பட்ட நிலையில் பெரும்பான்மையான மக்கள் இந்தியை பேசுகிறார்கள் என்ற வாதம் சரியல்ல என்பதையும் யாரும் மறுக்கவில்லை. ஆகையினாலே, இந்தியை ஆட்சி மொழியாக ஆக்காதீர்கள் என்ற அறிவுரையை மட்டும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள். வாதத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் —அந்த வாதத்திலிருந்து வருகின்ற முடிவுகளை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார்களென்றால், மூன்று காரணங்களைத்தான் சொல்ல முடியும்; ஒன்று—எந்த முடிவுகளைச் செய்தாலும் அதை சுமந்து தீரவேண்டிய துர்பாக்கிய நிலையில் நாம் இருக்கிறோம் என்ற துணிவு அவர்களுக்கு இருக்க வேண்டும்; மற்றொன்று 'இவர்கள் சில நாளைக்குத்தான் இந்த வாதங்களைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள்; நம் தீர்ப்பைச் சொல்லிவிட்டால் இவர்கள் சும்மா யிருந்து விடுவார்கள்' என்ற எண்ணமும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்; மூன்றாவது— தமிழ் நாட்டில் இப்போது இருக்கின்ற நிலைமையில் இவர்கள் ஒன்றுபடுவதென்



பது ஏது; இவர்கள் ஒன்றுபடாத நிலையிலே, ஒருவர் மற்றவருக்குள்ள பேதத்தை—இவர் அவர் மேலுள்ள பேதத்தை—இவர் அவர்— மேலுள்ள சந்தேகத்தை இந்த வகுப்பு அந்த வகுப்பு மேல் கொண்டுள்ள கிலேசத்தை— இதையெல்லாம் வைத்துக்கொண்டு நீண்ட நாளைக்குத் தள்ளிப் போட்டு விடலாம் என்று நினைக்கலாம்.

அப்படிக்கூட கருதுவார்களா? என்று என்னைக் கேட்பீர்கள். லோகியாவை, அறிவாளி என்று நாடு சொல்லுகிறது; ஏதோ ஒரு ஏட்டிலே படித்தேன். 'மற்றவர்களுக்கெல்லாம், தலையில் மூளையிருக்கிறது. லோகியாவிற்கு உடல் முழுவதும், மூளையிருக்கிறது என்று மகாத்மா காந்தி சொன்னதாக அந்த வட்டாரத்தில் சொல்லுகின்றார்கள்'—என்று, அந்த ஏட்டிலே எழுதப் பட்டிருக்கிறது.

'மகாத்மா என்னென்ன சொன்னார் என்பதை அறிந்திருப்பவரும், என்னென்ன செய்ய வேண்டுமென்றிருந்தார் என்பதை தெரிந்திருப்பவருமான ஆச்சாரியார் அவர்கள், அவருடைய பேச்சிலே, 'மகாத்மா அப்படி சொன்னாரா இல்லையா?' என்பதனை விளக்கிச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். டாக்டர் லோகியா அவர்கள், 'ஆச்சாரியார் இந்தி பிரச்சினையை எடுத்துக்கொண்டதற்கு ஒரு காரணமிருக்கிறது; அது எனக்கு விளங்கி விட்டது; என்று சொல்லியிருக்கிறார்; அது என்ன காரணம் என்று— யாரும் அவரைக் கேட்கவில்லை; யாரோ கேட்டதாக மனதில் வைத்துக்கொண்டு அவர் சொல்லுகின்றார்—'தென்னாட்டில் பார்ப்பனர்— பார்ப்பனரல்லாதார் என்ற வகுப்பாரிடையே வளர்ந்துவரும் கிலேசமிருக்கிறது; இந்த பிரச்னையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக —ஆச்சாரியார் இந்தி பிரச்சினையை கிளப்பியிருக்கிறார்.

வாழைப்பழத்தை உரித்துச்சாப்பிடுவதுமிகஎளிதான காரியம், பலாப்பழத்தை உரித்துச் சாப்பிடுவது அவ்வளவு எளிதான காரியமல்ல.

'பலாப்பழத்தை உரித்துச் சாப்பிடுகின்ற நேரத்தில், பழத்தைச் சாப்பிடலாமா என்ற ஆசை ஒருபுறமிருக்கும்; அதனை உள்ளே இருந்து சுளை எடுக்கின்ற நேரத்தில் கையில் ஒட்டிக்கொள்கின்ற பிசின் ஒருபுறமிருக்கும்; இதை நீக்குவது எப்படி என்று திண்டாடுவதை நாம் பார்க்கலாம். விஷயம் தெரிந்தவர்கள் ஒரு கையில் நெய்யை வைத்துக்கொண்டு அதனை விரலில் தொட்டுவிட்டு, பிறகு பலாச்சுளையை எடுப்பார்கள்.

தென்னாட்டில் நிலைமை எப்படியாகிவிட்டது என்றால் என்னுடைய கருத்தை நான் இங்கே சொல்கிறேன். அது அனுபவக்குறைவான கருத்தாக இருக்கலாம்—என்னுடைய கருத்தும் நாட்டின் கருத்துக்களிலே ஒன்று என்ற முறையில் சொல்லப்பிரியப்படுகிறேன்—என்னைப்பொறுத்த வரையில், பெருந் தலைவர்கள் இந்திய துணைக்கண்டத்திற்கு விடுதலையை வாங்கி— பலாப்பழத்தை உரித்து சுளையை எடுத்து வேறொருவரிடத்திலே கொடுத்துவிட்டு கடைசிவரை சுளையைக் கொடுக்கிற வேலையிலே இருந்ததாலே கையிலே உள்ள பிசினும் போகாமலிருப்பதைத்தான் நாம் இன்றைய தினம் பார்க்கிறோம்.

இதிலிருந்து பலாச்சுளை சுவையாக இருக்குமா இருக்காதா என்பதிலே எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை—சுயராஜ்யம் நல்லதா, இல்லையா என்பதிலே எனக்குச் சந்தேகமில்லை. கிடைத்த அந்தசுயராஜ்யம்—பலாச்சுளையை எடுத்துப் பக்கத்திலிருப்போர் கையிலே கொடுத்துவிட்டு கையிலே உள்ள பசையைப் போக்கிக் கொள்ள திண்டாடுவதைப்போல்,



விடுதலையை வாங்கிக் கொடுத்துவிட்டு, இன்றைய தினம், நம்முடைய மொழி எதுவாக இருக்க வேண்டும்—நம்முடைய வாழ்க்கை நிலை எவ்வாறு அமைய வேண்டும்—சட்ட திட்டங்கள் யாராலே எப்படி எப்படி எந்த எந்த இடத்திலே உண்டாக்கப்பட வேண்டும்—மக்களிடம் வசூலிக்கும் வரிப்பணம் எப்படி எப்படி பங்கிட்டுக் கொடுக்கப்பட வேண்டும்—தொழில் முறையெல்லாம் எப்படி அமைக்கப்பட வேண்டும்—என்று, இத்தனை விதத்திலும் நாம் ஒரு நல்ல முடிவுக்குவர முடியாமலும்—நாடே ஒரு நல்ல முடிவுக்கு வரமுடியாத நிலைமையிலும் இருக்கின்ற ஒரு 'பிசின்' நிலைமை நாட்டிலே இருப்பதைப் பார்க்கிறோம்!

* * *

இந்திய துணைக் கண்டத்திற்கு 14 தேசிய மொழிகள் இருப்பதாக அரசியல் சட்டம் கூடச் சொல்லுகிறது 14 தேசிய மொழிகளும் அதிகார மொழிகளாகட்டும், என்று எடுத்துச்சொல்லுவது எளிது; சுலபத்தில் புரிந்து கொள்ளக்கூடியது. நடை முறைக்கு வேண்டுமானால் சில சிக்கல்கள் இருக்குமே தவிர, அப்படிச் சொல்வதிலே அனைவருக்கும் திருப்தியிருக்கும்.

'14 தேசிய மொழிகளைக் கொண்ட பரந்த உபகண்டத்தில் ஒரு குறிப்பிட்ட மொழியை எடுத்து மற்று 13 மொழிகளுக்கும் தொடர்பு ஏற்படுத்துவதற்கு இந்த ஒரு மொழிதான் இலாயக்கு என்று வாதாடுகின்றார்கள் என்றால், அந்த மொழி பேசுகின்றவர்கள் வாதாடுமிடத்தில் அமர்ந்து இருக்கிறார்கள் என்பது தவிர வேறு என்ன பொருளிருக்கிறது என்று என்னையும் கேட்டுக் கொள்கிறேன்.

* * *

தோட்டத்துக் கதவைத் திறந்து வைக்கின்ற நேரத்தில் தோட்டத்திலிருக்கிற மல்லிகை மணம்

தான் உள்ளே வரவேண்டுமென்று தோட்டக்காரன் கதவைத் திறந்து வைக்கிறான்; ஆனால் தோட்டத்துக் கதவு திறந்திருந்தால், மல்லிகை மணம் வருவதற்குப்பதில் வழியிலே போகும் கள்ளனே கூட புகுந்து விடுகிறான்.

ஆச்சாரியார் அவர்கள், வெளி நாட்டினரிடமிருந்து இந்தியாவை பாதுகாப்பதற்காக ஒற்றுமையை வலியுறுத்திருக்கலாம். வெளிநாட்டினரிடமிருந்து நமக்கு பாதுகாப்பு கிடைக்க வேண்டுமென்றால், சின்னஞ் சிறிய நாடாக இருந்தால் ஆகாது. இந்தியா ஒன்று பட்டு இருந்தால் தான், அதன் பிரம்மாண்டமான தன்மையைப் பார்த்து—அதில் உள்ள 30 கோடி மக்களைப் பார்த்து, ஒரு புறமும் இமயமலையைப் பார்த்து, மற்ற மூன்று புறமும் சூழ்ந்திருக்கிற கடலைப்பார்த்து, இந்தியா ஒரு நாடு என்ற தன்மையைப்பார்த்து—இந்த நாட்டின் மீது அன்னியன் ஆசை நிரம்பிய கண்களைப் பாய்ச்சாது இருப்பான் என்ற காரணத்திற்காக—'இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும், என்று ஆச்சாரியார் வாதாடி யிருக்கக் கூடும்.

நான் சொன்ன உதாரணத்தின்படி, மல்லிகையின் மணம் உள்ளே வரும் என்றுதான் தோட்டக்காரன் கதவை திறந்து வைக்கிறான்; கள்ளன் உள்ளே நுழைகிறான். ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்று ஆச்சாரியார் அவர்கள் சொன்னதை—எல்லோரும் ஒன்றுபட்டிருக்கவேண்டும்; நான் கொடுப்பதை வாங்கிக் கொண்டு ஒன்றுபட்டிருக்கவேண்டும்; நான் திணிப்பதை சுமந்துக் கொண்டு ஒன்றுபட்டிருக்க வேண்டும் நான் தீட்டுகின்ற திட்டங்களுக்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டும்; என்று எடுத்துச் சொல்வது தான் இன்றைய அரசினுடைய கடமையாக இருக்கிறது.

* * *



இன்று இந்தியை எதிர்க்கிறவர்கள் யார்? ஒரு பக்கத்திலே அன்பர் ஆச்சாரியார், இன்னொரு பக்கத்திலே அண்ணாத்துரை கூட்டத்தார், இன்னொரு பக்கத்திலே பெரியார் இராமசாமிக் கூட்டத்தார்; இவர்களுக்குள் என்ன உறவு?

ஆச்சாரியார் என்றால் பெரியாருக்கு ஜன்ம விரோதி—நான் சொன்ன இந்த வாசகம், ஆச்சாரியாரே சொன்னதாக பத்திரிகைகளிலே பார்த்தேன்; அண்ணாதுரையும் ஆச்சாரியாருக்கு வேண்டாதவன். அண்ணாதுரைக்கும் பெரியாருக்கும் சிநேகிதமா என்றால் அதுவும் இல்லை. இப்படி, ஆலயத்தில் இருக்கிற நவக்கிரகங்கள் வெவ்வேறு திசைகளில் பார்த்துக் கொண்டிருந்தாலும், அவற்றை சுற்றுகிறவர்கள் ஓரே திசையில் சுற்றி ஆசீர்வாதத்தைப் பெறுகிறார்கள்! என்று, ஆலயம் போய் வந்தவர்கள் எனக்கு சொல்லி யிருக்கிறார்கள்.

ஆகையினாலே, நவக்கிரகங்களைப் போல, தலைவர்கள் வெவ்வேறுவிதமாக இருக்கின்றார்கள் என்றாலும், வருங்கால சந்ததிக்காக நாட்டின் நல்வாழ்வுக்காக நாட்டு மக்களில் ஒரு சாரார் மற்றொரு சாராரையோ, ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரையோ, ஆதிக்கம் செலுத்தாமல், சம நீதியை ஏற்படுத்துவதற்காக, இந்த ஒரு பிரச்சினையில், பல்வேறு கோணங்களில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

இந்தியைப் புகுத்தக் கூடாது என்று யார் யார் சொல்ல வேண்டுமோ, யார் யாருக்குச் சொல்ல உரிமை யிருக்கிறதோ அத்தனை பேரும் சொல்லியாகி விட்டது.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் நன்றாக அறிந்துள்ள ஆச்சாரியார் சொல்லுகின்றார்; பேராசிரி

யராயிருந்து பல்கலைக் கழகத் துணை வேந்தராக
இருந்த எம். இரத்தினசாமி, ஏ. இலட்சுமணசாமி
போன்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள்; எந்த விஷ
யத்தைப்பற்றியும் சற்றுக் கடுமையாக சொல்லிவிட்
டால் யாருக்காவது துன்பமாகப் படுமோ என்று
பயந்து பயந்து சொல்லுகின்ற பி. டி. ராசன் அவர்
களும் இந்த விஷயத்தில் கண்டிப்பாகச் சொல்லு
கிறார்; பெரியார் இராமசாமி ஒத்துக்கொண்டிருக்
கிறார்; சிவஞானம் கூட இரண்டாண்டுக்கு முன்.
ஆச்சாரியார், கூப்பிட்டு சொன்னபோது ஒத்துக்
கொண்டிருக்கிறார்.

நீங்கள் ஆங்கிலத்தையே வைத்துக் கொள்
ளுங்கள்; இந்தி தேவையில்லை என்று சொல்ல
வேண்டியவர்கள் அத்தனை பேரும் சொல்லியாகி
விட்டது; காட்ட வேண்டிய புள்ளி விவரங்கள்
அத்தனையும் காட்டப்பட்டாகி விட்டது. ஆனால்
எதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

* * *

கந்தசாமியும் கலெக்டர்! கார்த்திகேயனும்
கலெக்டர்! கார்த்திகேயன் ஜில்லா கலெக்டர்—கந்த
சாமி பில் கலெக்டர்!, அதுபோல, இந்தியும் ஆட்சி
மொழி—தமிழும் ஆட்சிமொழி. இந்தி எதற்கு ஆட்சி
மொழி என்றால், எல்லா நாடுகளும் இந்தியாவைப்
பற்றி அறிந்துகொள்ள அது பயன்படும், ஒரு ராஜ்
யத்திற்கும்—மற்றொரு ராஜ்யத்திற்கும் அது பயன்
படும்; சட்டங்கள் இயற்றப்பட்டால் அந்த மொழி
யில் எழுதப்படும்; உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால்
அந்த மொழியிலே பிறப்பிக்கப்படும்; கார்டு—கவர்
களில் அந்த மொழிதான் பொறிக்கப்படும்; இரயில்வே
பிளாட்பாரத்தில் உள்ள பலகைகளில் அந்த மொழி
தான்—இருக்கும்—அப்படிப்பட்ட ஆட்சி மொழி
யானது—ஜில்லா கலெக்டர்!



தமிழும் ஆட்சிமொழி—அது பில் கலெக்டர்!
இன்னின்ன வரிகள் கொடுங்கள், என்று வாங்கி பில்
கலெக்டர், முனிசிபாலிடியில் கொடுப்பது போல—
நான் சென்னை சர்க்கார் வரி வசூலிக்கின்ற முறை
யைச் சொல்லவில்லை—தமிழை இன்னின்ன இடத்
தில் படியுங்கள், என்ற 'எடுத்துச் சொல்வதற்குத்
தான் தமிழ் இங்கே ஆட்சி மொழியாக இருக்கிறது.

* * *

தமிழ்நாடு தனி நாடாகப் பிரிந்தால் தமிழ் ஆட்சி
மொழியாக இருக்கும், அந்த ஆங்கிலத்தில், அமிர்த
சரசிலையும் பேசலாம்—ஆம்ஸ்டர்டாமிலும் பேச
லாம்; லக்னோவிலும் பேசலாம்; மாக்மில்லனையும்
சந்திக்கலாம்—ஜவகர்லால் நேருவையும் சந்திக்கலாம்
கறுப்புக் கொடியில்லாமல்? ஏனென்றால், அது
துவேஷத்திற்காகச் செய்தது என்று யாரும் கருதி
விடக்கூடாது—என்று, நான் அதைச் சொல்லிக்
கொள்கிறேன்; அவரிடத்தில் நமக்கிருக்கும் மதிப்பு
ஒரு துளியும் மங்கவில்லை—ஒரு துளியும் அதனால்
குந்தகப்படவில்லை.

ஆகையினாலே 'தமிழ்நாடு தனி நாடாகப் பிரிய
வேண்டும். தமிழ்மொழி ஆட்சி மொழியாக வேண்
டும்—ஆங்கிலம் உலக மொழியாகவேண்டும்' என்ற
பிரச்சினைக்கு, நாட்டை இன்றைய தினம் வடநாட்டி
லுள்ளவர்கள் துரத்தியிருக்கிறார்கள் என்பதுதான்
நாம் பெற்ற பாடமாக இருக்கிறது.

* * *

நம் வீடு சிறிய வீடாக இருக்கலாம்? தமிழிலே
பாட்டு உண்டு—சின்ன வீடுதான் சிங்கார வீடு
என்று; வீடு சின்னதாக இருக்கும் காரணத்தாலேயே
மனம் சின்னதாக இருக்கும் என்று அர்த்தமல்ல!

இன்று காலையில் தான் பத்திரிகையிலே நான் பார்த்தேன். பர்மா நாட்டு முதலமைச்சர் யூ-நூ அவர்கள், சிறிய நாடுகள் பெரிய நாடுகளிடையே பேதம் பார்ப்பது அரசியல் தத்துவத்திற்கு ஒத்ததல்ல; சிறிய நாடுகளாக இருந்தாலும் உலகத்திலே மதிக்கப்படும் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

தமிழ்நாடு சிறிய நாடாக இருந்தாலும், ஆச்சாரியார் அவர்களே! ஒரு புறம் நல்ல அனுபவம் பெற்ற தாங்கள் இருக்கிறீர்கள்; மற்றொரு பக்கத்தில் நல்ல ஆற்றல் படைத்த பெரியார் இராமசாமி இருக்கிறார்; இன்னொரு பக்கத்திலே அகில உலகம் பார்த்துப் பாராட்டத் தக்க புலமை படைத்த ஏ. இராமசாமி, ஏ. இலட்சுமணசாமி, சி. பி. இராமசாமி இருக்கின்றார்கள். இவ்வளவு செல்வம் நம்முடன் இருக்கின்றபோது, நாடு சிறியதாயிருந்தால் என்ன? எங்களுக்கு நீங்கள் போதும்!

எங்களை எடுத்துக் கொண்டுபோய் ஒரு பெரிய இடத்தில் மாட்டிவிட்டு, பிற்காலத்தில் நாங்கள் எல்லாம் 'காரியத்தை செய்யக் கூடியவர்கள் செய்யாமல் விட்டு விட்டார்களே' என்ற அழுகுரலோடு உங்களைப்பற்றி எண்ணத்தக்க ஒரு அவல நிலையை ஏற்படுத்தாதீர்கள்,

நான் ஒரு சினிமா படத்தில் பார்த்தேன். கடித்த பாம்புதானே விஷத்தை எடுக்க வேண்டுமென்று உறிஞ்சி எடுக்கிறது; அதைப்போல, தாங்கள்தான் நாட்டின் ஒற்றுமையைப் பரப்பினீர்கள். இப்பொழுது தாங்களேதான் நாட்டு பிரிவினைக்கு வழி செய்யவேண்டும். தமிழருக்கு தமிழ்நாட்டை வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தி. மு. கழகம் உறுதியளிக்கின்ற தென்றால் தி. மு. கழகம் எந்த நோக்கத்திலேயும் யாரிடத்தி



லேயும் உள்ளதை பறி கொடுத்ததில்லை, நான் பழகிய பயிற்சி பெற்ற—நான் கண்ட ஒரே தலைவர் பெரியார் இராமசாமியிடமே உள்ளத்தை பறி கொடுக்காமல். அவர் ஒரு தவறு செய்தார் என்றபோது வெளியில் வந்தவன் நான் என்றால் வெகு சுலபத்தில் நான் எவருக்கும் உள்ளத்தைப் பறிகொடுத்து விடமாட்டேனென்று நாடு அறிந்திருக்கிறது. ஆகையினால் உள்ளதை பறிகொடுத்து விட்டு பேசுகின்ற வார்த்தை என்று அர்த்தமல்ல; உம்மாலே முடியும் என்ற நம்பிக்கையிருக்கிற காரணத்தினால்தான், உம்மிடத்தில் சொல்கிறேன்.

உலகம் பூராவும் பாகிஸ்தான் கிடைக்கவா போகிறது என்று எண்ணியிருந்த நேரத்தில் ஜனாப் ஜின்னாவுக்குக் கூட சந்தேகமிருந்த நேரத்தில் —காந்தியாருக்குக்கூட கலக்கம் இருந்த நேரத்தில்—ஜவகர்லால் நேரு அவர்கள் இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா, என்று எண்ணிய நேரத்தில் தாங்கள்தான், தன்னந் தனியாக ஆனால் தளராமல், பாகிஸ்தானத்தைப் பிரித்துக் கொடுப்பதன் மூலமாகத்தான், இந்தியத் துணைக்கண்டத்தின் எதிர்காலத்தில் சாந்தியிருக்கும்' என்று சொன்னீர்கள்! தங்கள் வார்த்தையை கேலி செய்தவர்கள் அனேகம் பேர்! தங்களை எதிர்த்து கிளம்பியவர்கள் அனேகம் பேர்! தாங்கள் காங்கிரசை விட்டு விலகி விட்டதாகக் கூடச் சொன்னார்கள்; தாங்களும் விலகி வந்து தான் அந்தக் காரியத்தைச் செய்தீர்கள்!

பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் எனும் தங்களின் யோசனைக்கு ஆதரவாக அன்று தாங்கள் சொன்ன ஒரு உதாரணத்தை இந்த நேரத்தில் நினைவூட்டுவதற்காக தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். இந்தியா இரண்டாவதா துண்டாடுவதா, என்பதற்குத் தாங்கள் சொன்னீர்கள்— நாம் அணிந்து கொள்கிற மேலாடையில் எங்கேயாவது

நைந்து போய்விட்டால் அதை அப்படியே வைத்தி ருந்தால் ஆடை பூராவும் பாழாகிவிடும். கொஞ்சம் யூகமுள்ளவர்கள் அந்த ஆடை எந்த இடத்தில் நைந் திருக்கிறதோ, அந்த இடமாகப் பார்த்து வெட்டி இரண்டு துண்டுகளாக்கினால், இரண்டு பேருக்கு மேலாடை கிடைக்கும்' என்று பாகிஸ்தான் பிரிவி னைக்குச் சொன்னீர்கள்.

இன்று நம் உள்ளங்கள் எல்லாம் நைந்திருக்கின் றன; இதில் யாருக்கும் சந்தேகமிருக்க முடியாது. பண்டித நேரு அவர்கள் சென்னைக்கு வந்திருந்த போது நம் தலைவர்களை ஏதோ பேசினார் என்பதை கேட்டபோது, 'எங்களுடைய உள்ளங்கள், எல்லாம் வாடின என்று சொல்லிக்கொள்கிறேன்; ஏனென்றால் உங்கள் உள்ளம் வாடியிருக்கமுடியாது; காரணம்: நீங் கள் வேதாந்தப்பயிற்சி பெற்றவர்கள்; எவர்வெகுண் டாலும் பரவாயில்லை என்று இருக்கக்கூடும்; ஆனால் எங்கள் உள்ளங்களெல்லாம் வாடின.

அப்படி வாடியதற்கு காரணம் என்ன? ஆச்சா ரியராக இருந்தாலும், பெரியார் இராமசாமியாக இருந்தாலும், அவர்களை யெல்லாம் தமிழ்நாட்டு தேசியச் சின்னங்களாக மதிக்கிறோம். அந்தத் தேசி யச் சின்னங்கள் அவமதிக்கப்படுகின்றன என்று தெரிந்தவுடன். அதைக் கண்டிக்க வேண்டும் என்ற எண்ணம் எங்களையும் அறியாமல் ஏற்படுகிறது.

ஒருவருக்கொருவர் பழகாதிருக்கிற இந்தச்சமயத் தில் 'தேசியச் சின்னம்' என்றவுடன் நம்மையும் அறி யாமல் ஒரு 'பந்தம்' ஏற்படுவது, என்பது உண்மையி லேயே நமக்குள்ளே இருக்க வேண்டிய வலிமையை எடுத் துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

816